بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡد

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 9

இதழ் 27 & 28

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian Tamil

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

ஹிஜ்ரீ கமரீ 1445 - துல்ஹஜ் 28 ★ ஹிஜ்ரீ ஷம்ஸி 1403 - ★ 04 - 11 ஜூலை 2024

## அல்லாஹ்வின் கட்டளை

وَ اِذَا صُرِفَتۡ اَبۡصَارُہُمۡ تِلۡقَآءَ اَصۡحٰبِ النَّارِ ۙ قَالُوۡا رَبَّنَا لَا تَجۡعَلۡنَا مَعَ الۡقَوۡمِ الظّٰلِمِیۡنَ ﴿۴۸﴾

பொருள்

சுவர்க்கத்திற்குரிய அவர்களின் பார்வைகள் நரகத்திற்குரியவர்களின் பக்கம் திருப்பப்படும்போது, அவர்கள் எங்கள் இறைவா! எங்களை அநீதி இழைக்கும் சமுதாயத்தினரைச் சார்ந்தவர்களாக ஆக்கி விடாதிருப்பாயாக என்று கூறுவர்.(7:48)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## ஆன்மாவிற்கு இன்பம் எதில் உள்ளது? என்பதை உலகம் அறிய விரும்பினால் பின்னர் அது திருக்குர்ஆனில் மட்டுமே உள்ளது என்பதை அறிந்து கொள்ளும்

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

நான் காண்கின்றேன்: தற்போது உலகின் கவனம் உலக அறிவுகளின் பக்கம் அதிகம் குனிந்து இருக்கின்றது. மேலும் மேற்கத்திய ஒளியானது உலகை தனது புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் படைப்புகளின் மூலம் ஆச்சரியத்தில் உறைய வைத்துள்ளது. முஸ்லிம்களும் தமது வெற்றி மற்றும் முன்னேற்றத்திற்கான ஒரு வழியாக ஒன்றை கருதுகின்றனர் என்றால் பின்னர் அவர்கள் துரதிஷ்டவசமாக இதனையே கருதுகின்றனர். அதாவது மேற்கில் வசிப்பவர்களை தங்களது இமாம் ஆக ஆக்கிக் கொள்ள வேண்டும்; மேலும் ஐரோப்பாவை பின்பற்றி நடப்பதில் பெருமை கொள்ள வேண்டும் என்று அவர்கள் கருதுகின்றனர். இதுவே நவீன அறிவு படைத்த முஸ்லிம்களின் நிலையாக இருக்கின்றது. எந்த மக்கள் பழைய கலாச்சாரத்தைக் கொண்ட முஸ்லிம்கள் என்று அழைக்கப்படுகின்றனரோ மேலும் தங்களை மார்க்கத்தின் உதவியாளர்களாக கருதுகின்றனரோ அவர்களின் முழு வாழ்நாளின் சாராம்சமும் சுருக்கமும் இதுவாக இருக்கின்றது.. அதாவது இலக்கண இலக்கிய சண்டைகள் மற்றும் சிக்கல்களில் சிக்கிக் கிடக்கின்றனர். மேலும் لَا الضَّآلِّیۡنَ என்ற சொல்லை உச்சரிக்கும் சண்டையில் மடிந்து கொண்டிருக்கின்றனர். திருக்குர்ஆனின் பக்கம் முற்றிலும் கவனமே செலுத்துவதில்லை. மேலும், உள்ளத்தை தூய்மைப்படுத்துவதன் பக்கம் கவனம் செலுத்தாத போது அவர்கள் இதன் பக்கம் கவனமும் எவ்வாறு செலுத்த முடியும்?

ஆயினும், இப்படியும் ஒரு கூட்டத்தினர் இருக்கின்றனர். அதாவது அவர்கள் உள்ளத்தை தூய்மைப்படுத்துவதற்கான வாதம் செய்கின்றனர். அது ஸூஃபிமார்களின் கூட்டம் ஆகும். ஆனால் அந்த மக்களும் திருக்குர்ஆனை கைவிட்டு விட்டனர். மேலும் தங்களுக்கான ஒரு புதிய பாதையை வகுத்துக் கொண்டுள்ளனர். ஒருவர் விரதம் இருக்கின்றார். மற்றொருவர் இல்லல்லாஹ் என்று முழக்கமிடுகின்றார். மற்றொரு கூட்டத்தினர் எதிர்மறை அம்சங்கள், தவஜ்ஜா எனும் மனதை ஒருநிலைப்படுத்துதல் மற்றும் ஓதி ஊதுதல் போன்ற நோய்களில் மூழ்கியுள்ளனர். சுருக்கமாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் நிரூபணமாகாத வழிமுறைகளை இவர்கள் உருவாக்கி

இதன் தொடர்ச்சி 8-ம் பக்கம்....

## சமுதாய ஒற்றுமையை நிலைபெறச் செய்வதற்கு உடன்படிக்கைகளை பேணுவது மிகவும் அவசியம் ஆகும். எனவே மனிதன் தனது வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு எல்லா வகையிலும் முயல வேண்டும். அப்போதுதான் நம்பிக்கை நிலை பெறும். மேலும் மக்கள் சுய விருப்பத்துடன் ஒருவர் மற்றவருக்கு உதவி செய்வதற்கு தயாராக இருப்பார்கள். மேலும் சமுதாயம் முன்னேற்றம் அடைய முடியும்

وَلَا تَکُوۡنُوۡا کَالَّتِیۡ نَقَضَتۡ غَزۡلَہَا مِنۡۢ
بَعۡدِ قُوَّۃٍ اَنۡکَاثًا ؕ تَتَّخِذُوۡنَ اَیۡمَانَکُمۡ
دَخَلًۢا بَیۡنَکُمۡ اَنۡ تَکُوۡنَ اُمَّۃٌ ہِیَ اَرۡبٰی
مِنۡ اُمَّۃٍ ؕ اِنَّمَا یَبۡلُوۡکُمُ اللّٰہُ بِہٖ ؕ وَلَیُبَیِّنَنَّ
لَکُمۡ یَوۡمَ الۡقِیٰمَۃِ مَا کُنۡتُمۡ فِیۡہِ
تَخۡتَلِفُوۡنَ ﴿۹۳﴾

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த வசனத்தின் விளக்கவுரையில் கூறுகின்றார்கள்:

இந்த வசனத்தை ஒரு புதிய கருத்தாக குறிப்பிட முடியும். மேலும் முந்தைய வசனத்தின் கருத்தின் தொடர்ச்சியாகவும் குறிப்பிட முடியும். முந்தைய வசனத்தின் கருத்தின் தொடச்சியாகவே இதனை புரிந்து கொண்டால் பின்னர் இந்த வசனத்தின் பொருள் இவ்வாறாக அமையும். அதாவது, பரஸ்பர உடன்படிக்கைகளை முழுமையாக நிறைவேற்றுங்கள்; நீங்கள் இந்த உடன்படிக்கைகளை முறித்தீர்கள் என்றால் பின்னர் இறைவன் உருவாக்கியுள்ள உங்களது வலிமையான ஜமாஅத் அழிந்து விடும். மேலும் பரஸ்பர நம்பிக்கை சிதைந்து கொண்டிருக்கும்.

உடன்படிக்கைகளை பேணுவது சமுதாய ஒற்றுமையை நிலைநாட்டுவதற்கு மிகவும் அவசியம் ஆகும். ஏனெனில், ஒருவர் மற்றவரிடம் அழகிய முறையில் நடந்து கொள்வதில்தான் ஜமாஅத் நிலைபெறுதலின் அடித்தளம் அமைந்துள்ளது. மக்கள் உடன்படிக்கைகளை பேணுகின்ற வரை தான்

இதன் தொடர்ச்சி 8-ம் பக்கம்....

## நபிமொழி

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மது வியாபாரத்தையும் கூட ஹராமாக்கி விட்டார்கள்**

(2083) ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மக்களிடத்தில் எப்படிப்பட்ட ஒரு காலம் வரும் என்றால் மனிதன் செல்வத்தை பெறும்போது, அது ஹலாலா? அல்லது ஹராமா என்பதை பொருட்படுத்த மாட்டான்.

(2084) ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அன்னார் (ரலி) கூறினார்கள்: சூரா அல்பக்ராவின் கடைசி வசனங்கள் இறங்கியபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மஸ்ஜிதில் அமர்ந்து அதனை கூறிக் கொண்டிருந்தார்கள். மேலும் அன்னார் (ஸல்) மதுவை விற்பனை செய்வதையும் கூட ஹராமாக்கி விட்டார்கள்.

**ஹஸ்ரத் குப்பாப் (ரலி) அவர்களின் ஈமானும், அன்னாரின் உறுதிப்பாடும்**

(2091) ஹஸ்ரத் கப்பாப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் அறிவீனமான காலகட்டத்தில் கொல்லன் பணியை செய்து வந்தேன். மேலும் ஆஸ் பின் அவாயில் என்னிடம் கடன் வாங்கியிருந்தான். நான் அவனிடம் கடனை வாங்குவதற்காக சென்றேன். அப்போது, நீர் முஹம்மதை ((ஸல்) அவர்களை) நிராகரித்து விடாத வரை நான் (உன்னிடம் வாங்கிய) கடனை கொடுக்க மாட்டேன் என்று அவன் கூறினான்.

அதற்கு நான் கூறினேன்: அல்லாஹ் உன்னை மரணிக்கச் செய்து உயிர்பித்து விட்டாலும் கூட அந்நிலையிலும் நான் நிராகரிக்க மாட்டேன். அப்போது, அப்படியா நல்லது; நான் மரணித்து பின்னர் உயிர்பிக்கப்படும் வரை என்னை விட்டு விடு; அப்போது எனக்கு என்ன செல்வமும், சந்ததிகளும் கிடைக்குமோ அதிலிருந்து நான் உமது கடனை அடைக்கின்றேன் என்று அவன் கூறினான்.

(புகாரி, தொகுதி 4, பாடம்: வியாபாரம், காதியான் பதிப்பு 2008 ம் ஆண்டு பதிப்பு)

* * * * *

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் குபைப் (ரலி) அவர்களுடைய ஷஹாதத் சம்பவத்தைப் பற்றிய ஈமானை வலுவூட்டக் கூடிய குறிப்புகள் & பாலஸ்தீன மக்களுக்காகவும், சூடான், ஏமன் மற்றும் பாகிஸ்தானைச் சேர்ந்த அஹ்மதிகளுக்காகவும் துஆ செய்வதற்கான அறிவுரை**

அல்லாஹ்வே! எனது ஸலாமை உனது தூதர் (ஸல்) அவர்கள் வரை கொண்டு சேர்க்கக் கூடிய எவரும் இங்கு தற்போது இல்லை ; எனவே, இறைவா! நீ சுயமே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எனது ஸலாத்தை எட்ட வைத்து விடுவாயாக!; மேலும், எங்களுடன் இங்கு நடந்து கொண்டிருப்பதை அன்னாருக்கு கூறிவிடுவாயாக! என்று ஹஸ்ரத் குபைப் (ரலி) அவர்கள் துஆ செய்தார்கள்.

சிலுவையில் அறைந்து ஷஹீதாக்கப்பட்ட முதல் ஸஹாபி ஹஸ்ரத் குபைப் (ரலி) அவர்கள் ஆவார்கள்

கொலை செய்யப்படுவதற்கு முன்னர் இரண்டு ரக்அத்து நஃபில் தொழக் கூடிய நடைமுறையை நிறுவிய முதல் ஸஹாபி ஹஸ்ரத் குபைப் (ரலி) அவர்களாக இருந்தார்கள்

இந்த மக்கள் எத்தகைய மக்களாக இருந்தனர் என்றால் அவர்கள் அல்லாஹ்வை நேசிக்கக் கூடியவர்களாகவும் மேலும் அல்லாஹ்விற்காக தியாகங்கள் செய்யக் கூடியவர்களாகவும் இருந்தனர்

மேலும் அல்லாஹ்வும் அவர்களுக்கு கண்ணியமளித்து வந்தான்; மேலும் அவர்கள் மரணித்தப் பிறகும் கூட அவர்களின் உடல்களை பாதுகாப்பாக வைத்தான்

எம் டி ஏ அமெரிக்காவின் டெலிபோர்ட் டைரக்டர் மதிப்பிற்குரிய சவ்த்ரி முனீர் அஹ்மத் ஸாஹிப் மற்றும் அலநல்லூர் கேரளாவைச் சேர்ந்த மதிப்பிற்குரிய அப்துர் ரஹ்மான் ஸாஹிப் ஆகியோரின் நற்குறிப்புகளும் ஜனாஸா காயிப் தொழுகையும்

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**

(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 31 மே 2024** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1403 ஆண்டு **ஹிஜ்ரத்** மாதம் **31 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

ஒரு ஸரிய்யாவைப் பற்றிய குறிப்பில் ஹஸ்ரத் குபைப் (ரலி) அவர்கள் ஷஹீதாக்கப்பட்டது பற்றிக் கூறப்பட்டுக் கொண்டிருந்தது. அதன் கூடுதல் விளக்கத்தில், மரக்கட்டையில் கட்டி ஷஹீதாக்கப்பட்ட முதல் ஸஹாபி இவர் ஆவார் என்று எழுதப்பட்டுள்ளது. அதாவது அவர் சிலுவையில் அறைந்து ஷஹீதாக்கப்பட்டார். அல்லாஹ்விற்காக சிலுவையில் அறையப்பட்டு ஷஹீதாக்கப்பட்ட முதல் ஸஹாபி ஹஸ்ரத் குபைப் (ரலி) அவர்கள் ஆவார்கள் என்று அல்லாமா இப்னு அஸீர் ஜஸ்ரீ எழுதுகின்றார்கள். (அஸதுல் காபா, தொகுதி 2, பக்கம் 156, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் பதிப்பு - 2003ம் ஆண்டு )

நீங்கள் இஸ்லாத்திலிருந்து விலகி விட்டால் பின்னர் நாங்கள் உங்களுக்கான வழியை விட்டுவிடுவோம்; ஆனால் நீங்கள் விலகவில்லையென்றால் பின்னர் நாங்கள் உங்களை கொன்று விடுவோம் என்று குறைஷியர்கள் ஹஸ்ரத் குபைப் (ரலி) அவர்களிடம் கூறினர். (அதற்கு) அல்லாஹ்வின் வழியில் நான் கொலை செய்யப்படுவது என்பது ஒரு சாதாரண விஷயமாகும் என்று ஹஸ்ரத் குபைப் (ரலி) அவர்கள் கூறினார்கள். பின்னர் அவ்வாறே கொலை செய்யப்பட்டார்கள்.

அல்லாஹ்வே! எனது ஸலாமை உனது தூதர் (ஸல்) அவர்கள் வரை கொண்டு சேர்க்கக் கூடிய எவரும் இங்கு தற்போது இல்லை ; எனவே, இறைவா! நீ சுயமே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எனது ஸலாத்தை எட்ட வைத்து விடுவாயாக!; மேலும், எங்களுடன் இங்கு நடந்து கொண்டிருப்பதை அன்னாருக்கு கூறிவிடுவாயாக! என்று அன்னார் (ரலி) கூறினார்கள்.

(ஸீரதே ஹல்பியா, தொகுதி 3, பக்கம் 235, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் பதிப்பு)

ஹஸ்ரத் உஸமா பின் ஸைத் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஒருநாள் இறைத் தூதர் (ஸல்) அவர்கள் தமது தோழர்களுடன் அமர்ந்திருந்தார்கள். இறைத் தூதர் (ஸல்) அவர்கள் மீது வஹீ இறங்கும் நேரத்தில் ஏற்படக் கூடியத் தன்மை உருவானது.

وَعَلَيْهِ السَّلَامُ وَرَحْمَةُ اللّٰهِ وَبَرَكَاتُهُ

என்று அன்னார் (ஸல்) கூறியதை நாங்கள் செவியுற்றோம்.

பொருள்: அவர் மீதும் அல்லாஹ்வின் சாந்தியும், அருட்களும் உண்டாகட்டுமாக!

பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வஹீயினுடைய தாக்கங்கள் முடிந்த போது,தற்போது குபைபுடைய ஸலாத்தை ஜிப்ராயீல் (அலை) அவர்கள் எனக்கு எட்ட வைத்துக் கொண்டிருந்தார்கள் என்றும்,குபைபை குறைஷிகள் கொன்று விட்டனர் என்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பில் வருகின்றது: ஹஸ்ரத் குபைப் (ரலி) அவர்களை கொலை செய்யும் நேரத்தில் நாற்பது நபர்களை குறைஷிகள் அழைத்தனர். அந்த நாற்பது நபர்களின் தந்தைகளும், பாட்டனார்களும் பத்ர் போரின் போது கொலையுண்டிருந்தனர். பின்னர் குறைஷிகள் அவர்களில் ஒவ்வொருவரிடமும் ஓர் ஈட்டியைக் கொடுத்து, உங்களுடைய தந்தைமார்களையும், பாட்டன்மார்களையும் கொன்ற நபர் இவர் தான் என்று கூறினர். (ஸீரத் ஹல்பியா, தொகுதி 3, பக்கம் 236, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத்)

ஆக, இந்த மக்கள் குபைப் (ரலி) அவர்களை தமது ஈட்டிகளால் மெது மெதுவாக தாக்குதல் நடத்தினர். அப்போது ஹஸ்ரத் குபைப் (ரலி) அவர்கள் சிலுவையில் நிம்மதியிழந்தார்கள். பின்னர் குபைப் (ரலி) அவர்கள் திரும்பினார்கள். அப்போது அன்னாரின் முகம் கஅபாவை நோக்கி திரும்பி விட்டது. அன்னார் (ரலி) கூறினார்கள்: எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! அவன் தனக்காக விரும்பியுள்ள தனது கிப்லாவின் பக்கம் எனது முகத்தை திருப்பி விட்டான். (ஸுபுலுல் ஹுதா, தொகுதி 6, பக்கம் 44, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் பதிப்பு)

இணை வைப்பாளர்கள் முதலில் ஹஸ்ரத் குபைப் (ரலி) அவர்களை ஈட்டியால் குத்தினார்கள்; கடும் துன்பங்களைக் கொடுத்தனர்; பின்னர் கொலை செய்தனர் என்று இதிலிருந்து தெரிய வருகின்றது. ஆனால், புகாரியின் ஓர் அறிவிப்பிலிருந்து இவ்வாறு தெரிய வருகின்றது: அதாவது, ஹஸ்ரத் குபைப் (ரலி) அவர்கள் தமது கவிதைகளை படித்து முடித்த பிறகு உக்பா பின் ஹாரிஸ் என்பவன் அன்னாரிடம் சென்றான். மேலும் அவன் ஹஸ்ரத் குபைப் (ரலி) அவர்களை கொலை செய்தான்.

(ஸஹீஹ் புகாரி, கிதாபுல் மகாஸீ, ஹதீஸ் எண்: 4086)

உக்பா பின் ஹாரிஸுடைய சுட்டுப் பெயர் அபூ ஸிர்வஆஃ என்று கூறப்படுகின்றது. மேலும், அபூ ஸிர்வஆஃ உக்பா பின் ஹாரிஸ் அந்நேரத்தில் சிறுவனாக இருந்தான் என்று சில அறிவிப்புகளில் குறிப்பு வருகின்றது. அவனது கையில் ஈட்டி கொடுக்கப்பட்டது. ஆனால், அபூ மைய்ஸரா அப்தரீ என்பவன் தாக்குதல் நடத்தினான். சில சிறுவர்களின் கையில் பழிவாங்குவதற்காக ஈட்டி கொடுக்கப்பட்டது. ஆனால், மற்ற பெரிய ஆட்கள் அதில்

அழுத்தம் கொடுத்தனர். சில ஆலிம்கள் அபூ ஸிர்வஆவின் பெயர் தனியாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் உக்பா பின் ஹாரிஸ் அவனது சகோதரன் ஆவான் என்றும் எழுதப்பட்டுள்ளது. அபூ மைஸரா தாக்குதல் நடத்திய போது அது வெற்றியடையவில்லை. அதனால் அபூஸிர்வஆ என்பவன் முன்னால் சென்று ஈட்டியால் கதையை முடித்து விட்டான். பின்னர் உக்பா பின் ஹாரிஸ் என்பவர் மக்கா வெற்றி கொள்ளப்பட்ட போது இஸ்லாத்தை தழுவி விட்டிருந்தார்.

நான் அப்போது சிறுவனாக இருந்தேன்; மேலும் அபூ மைஸரா அப்தரீ எனது கையில் கத்தி அல்லது ஈட்டியைக் கொடுத்தான். மேலும் எனது கையின் மூலமாக அவனே ஹுபைபைக் கொன்று விட்டான்.(தாயிரா மஆருஃப் ஸீரத் முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எனும் நூல், தொகுதி 7, பக்கம் 148 - 149)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் இது தொடர்பாக இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

குறைஷியத் தலைவர்களின் உள்ளப் பகைமைக்கு முன்னால் கருணை மற்றும் நீதிக்கான உணர்வுக்கான பேச்சுக்கே இடம் இல்லாமல் இருந்தது. ஆக, அப்போது பனூ ஹாரிஸ் கோத்திர மக்களும், இதர குறைஷிய தலைவர்களும் குபைபை கொலை செய்வதற்காகவும், அவர் கொலை செய்யப்படுவதை கொண்டாடுவதற்காகவும் அவரை ஒரு திறந்த வெளி மைதானத்திற்கு கொண்டு வந்தனர். குபைப் (ரலி) அவர்கள் ஷஹாதத்திற்கான நறுமணத்தை நுகர்ந்தபோது, மரணிப்பதற்கு முன்னால் எனக்கு இரண்டு ரக்அத்துகள் தொழ அனுமதி கொடுங்கள் என்று குறைஷிகளிடம் உருக்கத்துடன் கூறினார். இஸ்லாமியத் தொழுகையின் காட்சியைக் கூட வேடிக்கையாக ஆக்க விரும்பியிருந்த குறைஷிகள் அதற்கு அனுமதி கொடுத்து விட்டனர். மேலும் குபைப் (ரலி) அவர்கள் பெரும் கவனத்துடனும், உருக்கமான இதயத்துடனும் இரண்டு ரக்அத்துகள் தொழுகையை நிறைவேற்றினார்கள். பின்னர் தொழுகையை முடித்து விட்டு, குறைஷிகளிடம் இவ்வாறு கூறினார்கள்:

எனது தொழுகையை நான் நீட்டிக்க வேண்டும் என்று எனது உள்ளம் விரும்பியிருந்தது; ஆனால், நான் மரணித்தை தள்ளிப்போடுவதற்காக தொழுகையை நீட்டிக்கின்றேன் என்று நீங்கள் எண்ணி விடுவீர்களோ என்ற எண்ணம் எனக்கு தோன்றியது.

மேலும், பின்னர் குபைப் (ரலி) இந்தக் கவிதைகளைப் படித்தவாறு முன்னால் குனிந்தார்கள்:

وَمَا اَنْ اُبَالِىْ حِيْنَ اُقْتَلُ مُسْلِمًا
عَلٰى اَيِّ شِقٍّ كَانَ لِلّٰهِ مَصْرَعِىْ
وَذَالِكَ فِىْ ذَاتِ الْاِلٰهِ وَ اِنْ يَّشَاء
يُبَارِكْ عَلٰى اَوْصَالِ شَلْوٍ مُمَزَّعِ

பொருள்: நான் இஸ்லாத்தின் வழியில் முஸ்லிமான நிலையில் கொலை செய்யப்பட்டு கொண்டு இருக்கின்றேன். எனவே நான் கொலை செய்யப்பட்டு எந்தப் பக்கம் வீழ்வேனோ? என்ற கவலை எனக்கில்லை. இவை அனைத்தும் இறைவனுக்காக ஆகும். மேலும், எனது இறைவன் விரும்பினால் பின்னர் எனது துண்டு துண்டாக்கப்படும் உடலில் கூட அருட்களை இறக்கி விடுவான். அநேகமாக, அப்போது குபைபுடைய நாவில் இந்த கவிதைகளின் கடைசி சொற்கள் ஒலித்துக் கொண்டிருந்தன. அந்நிலையில் உக்பா பின் ஹாரிஸ் முன்னால் சென்று தாக்குதல் நடத்தினான். மேலும், தூதரின் நேசரான இவர் மண்ணில் இருந்தார்.

மற்றோர் அறிவிப்பில் இவ்வாறு வருகின்றது: குறைஷிகள் குபைப் (ரலி) அவர்களை ஒரு மரத்தின் கிளையில் தொங்க விட்டிருந்தார்கள். பின்னர் ஈட்டியால் குத்தி குத்தி கொன்று விட்டனர். ( ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்களின் நூல் - ஸீரத் காத்தமுன்னபிய்யீன், பக்கம் 515)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இது குறித்து இவ்வாறு எடுத்துரைக்கின்றார்கள்:

ஹஸ்ரத் குபைப் (ரலி) கொலை செய்யப்படுவதற்கான நேரம் வந்தபோது, எனக்கு இரண்டு ரக்அத்துகள் தொழுவதற்கு அனுமதி கொடுங்கள் என்று அன்னார் (ரலி) கூறினார்கள்.குறைஷியர்களும் அன்னாரது இந்தக் கூற்றை ஏற்றுக் கொண்டு விட்டனர். மேலும் ஹுபைப் (ரலி) அவர்கள் அனைவரின் முன்பும் இவ்வுலகில் கடைசியாக தனது அல்லாஹ்வை வணங்கினார்கள். மேலும், நான் தொழுகையை தொடர விரும்பியிருந்தேன்; ஆனால், நான் மரணத்திற்கு அஞ்சுகின்றேன் என்று நீங்கள் எண்ணி விடுவீர்கள் என்ற எண்ணத்தால் நான் முடித்து விட்டேன் என்று அன்னார் (ரலி) தொழுகையை முடித்து விட்ட பிறகு கூறினார்கள். பின்னர் மிகவும் தைரியமாக தமது தலையை கொலையாளிக்கு முன்னால் வைத்து விட்டார்கள். மேலும், அவ்வாறு செய்தவாறு இந்தக் கவிதைகளைப் படித்தார்கள்:

وَلَسْتُ اُبَالِىْ حِيْنَ اُقْتَلُ مُسْلِمًا
عَلٰى اَيِّ جَنْبٍ كَانَ لِلّٰهِ مَصْرَعِىْ
وَذٰلِكَ فِىْ ذَاتِ الْاِلٰهِ وَاِنْ يَّشَأْ
يُبَارِكْ عَلٰى اَوْصَالِ شِلْوٍ مُمَزَّع

பொருள்: நான் இஸ்லாத்தின் வழியில் முஸ்லிம் என்ற நிலையில் கொலை செய்யப்பட்டு கொண்டு இருக்கின்றேன். எனவே நான் கொலை செய்யப்பட்டு எந்தப் பக்கம் வீழ்வேனோ? என்ற கவலை எனக்கில்லை. இவை அனைத்தும் இறைவனுக்காக ஆகும். மேலும், எனது இறைவன் விரும்பினால் பின்னர் எனது துண்டு துண்டாக்கப்படும் உடலில் கூட அருட்களை இறக்கி விடுவான். அநேகமாக, அப்போது குபைப் (ரலி) அவர்கள் இந்தக் கவிதையைப் படித்து முடித்து தான் இருந்தார்கள். அதற்குள் கொலையாளியின் வாள் அன்னாரின் கழுத்தின் மீது விழுந்தது. மேலும் அன்னாரின் தலை மண்ணில் சென்று விழுந்தது. (தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் உலூம், தொகுதி 20, பக்கம் 262)

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: கொலை செய்யப்படுவதற்கு முன்னர் இரண்டு ரக்அத்துகள் தொழுகையை தொழுவதற்கான நடைமுறையை நிலைநாட்டிய முதல் நபர் ஹஸ்ரத் ஹுபைப் (ரலி) அவர்களாக இருந்தார்கள்.

(ஸஹீஹ் புகாரி, கிதாபுல் மகாஸீ, ஹதீஸ் எண்: 4086)

எதிரிகளுக்கு எதிராக ஹஸ்ரத் குபைப் (ரலி) அவர்கள் செய்த துஆ மற்றும் அந்த துஆவின் விளைவால் அவர்களின் முடிவு என்ன ஆனது? இது தொடர்பாக புகாரியின் விரிவுரையாளர் அல்லாமா இப்னு ஹஜரே அஸ்கலானீ அவர்கள் ஸரிய்யா ரஜீஃ சம்பவத்தின் கீழ் ஒரு ஹதீஸின் விளக்கவுரையில் இவ்வாறு எழுதுகின்றார்கள்:

குபைப் (ரலி) அவர்கள் ஷஹாதத் நேரத்தில் اَللّٰهُمَّ أَحْصِهِمْ عَدَدًا என்ற துஆவை செய்தார்கள்.

பொருள்: அல்லாஹ்வே! இந்த எதிரிகளின் எண்ணிக்கையை கணக்கிட்டு வைப்பாயாக. என்னுடைய இந்த எதிரிகளை அவர்களை பழிவாங்குவதற்காக கணக்கிட்டுக் கொள்வாயாக!

மேலும் மற்றோர் அறிவிப்பில் இந்த சொற்கள் கூடுதலாக உள்ளன.

وَاقْتُلْهُمْ بَدَدًا وَلَا تُبْقِ مِنْهُمْ اَحَدًا

பொருள்: அவர்களை எண்ணி எண்ணி, கொலை செய்வாயாக! மேலும் அவர்களில் எவரையும் விட்டு வைக்காதே!

ஹஸ்ரத் குபைப் (ரலி) அவர்கள் கொலை செய்யப்படுவதற்காக பலகையில் ஏற்றப்பட்டார்கள். அப்போது அன்னார் (ரலி) இந்த துவை செய்திருந்தார்கள்.

اَللّٰهُمَّ أَحْصِهِمْ عَدَدًا وَاقْتُلْهُمْ بَدَدًا

என்ற இந்த துஆவை ஓர் இணை வைப்பாளன் செவியுற்றான்.

பொருள்: அவர்களை எண்ணி எண்ணி, கொலை செய்வாயாக!; மேலும் அவர்களில் எவரையும் விட்டு வைக்காதே!

இந்த துஆவை அவன் செவிமடுத்த போது அச்சத்தின் காரணமாக பூமியில் படுத்துக் கொண்டான்.

கூறுகின்றனர்: பூமியில் படுத்துக் கொண்ட அந்த நபரைத் தவிர குபைப் (ரலி) அவர்களின் கொலையில் பங்கு பெற்ற எல்லா மக்களும் ஒரு வருடத்திற்குள் மரணித்து விட்டனர்; அனைவரும் அழிந்து விட்டனர். (ஃபத்ஹுல் பாரி, ஷரஹ் ஸஹீஹுல் புகாரி, பாகம் 7, பக்கம் 443, தாருர் ரியான் லித்தாரஸுல் காஹிர், 1986)

எவ்வாறு இருப்பினும் ஒரு வருடம் கழிவதற்குள் அனைவரும் அழிந்து விட்டனர் என்ற இந்த விஷயம் வேறு எந்த இடத்திலிருந்தும் நிரூபணமாகவில்லை. ஆயினும், அவர்களில் பெரும்பாலார் கொல்லப்பட்டு விட்டனர் என்று கூற முடியும். ஒன்று கொல்லப்பட்டு விட்டனர் அல்லது மக்கா வெற்றி வரை அனைவருமே இஸ்லாத்தை தழுவி விட்டனர். மேலும் இவ்வாறு ஹஸ்ரத் குபைப் (ரலி) அவர்களின் துஆ முழுப் பொலிவுடன் நிறைவடைந்தது. அதாவது சிலரோ நரகிற்கு சென்றனர். மேலும் எஞ்சிய மக்களுக்கு இஸ்லாத்தின் நேர்வழி கிடைத்தது.

ஒரு வரலாற்றாசிரியர் இது தொடர்பாக இவ்வாறு எழுதுகின்றார்:

இணை வைப்பாளர்கள் குபைப் (ரலி) அவர்களின் நாவிலிருந்து வெளிப்பட்ட இந்த சொற்களை கேட்டு நடுங்கி விட்டனர். குபைப் (ரலி) அவர்களுடைய இந்த தீய துஆ வீணாகாது என்பதில் அவர்களுக்கு உறுதி இருந்தது. ஹாரிஸ் பின் ரஸாஃ அங்கு



இருந்தார்கள். அன்னார் அப்போது முஸ்லிம் ஆகியிருக்கவில்லை. அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: இனி இந்த துஆ அவர்களில் எவரையும் உயிருடன் விட்டு வைக்காது என்ற நம்பிக்கை குபைப் (ரலி) அவர்களின் இந்த துஆவை செவிமடுத்த உடனேயே எனக்கு ஏற்பட்டு விட்டது. அந்த துஆவைக் கேட்டு விட்டு அங்கு இருந்த நிராகரிப்பாளர்கள் மற்றும் இணை வைப்பாளர்களில் சில மக்கள் காதுகளில் விரல்களை நுழைத்துக் கொண்டு ஓடி விட்டதற்கு இதுவே காரணமாக இருந்தது. சில மக்கள் பின்னால் ஒளிந்து கொண்டனர்; சிலர் மரங்களின் மேலே ஏறிக் கொண்டனர். மேலும் சிலரோ நிலத்தில் படுத்துக் கொண்டனர். இவ்வாறு நாம் அந்த துஆவின் தாக்கத்திலிருந்து தப்பித்துக் கொள்ளலாம் என்பது அவர்களின் எண்ணமாக இருந்தது. ஒரு நபருக்கு எதிராக துஆ செய்யப்படும் போது அவர் முகங்குப்புற படுத்துக் கொண்டால் பின்னர் அவருக்கு அந்த துஆவின் தீய தாக்கம் அழிந்து விடும் என்பது அவர்களிடம் அங்கு மரபாக பிரபல்யமடைந்து இருந்தது.

தாமும், தமது தந்தையும் இஸ்லாத்தை ஒப்புக் கொள்வதற்கு முன்னர் நிகழ்ந்த சம்பவத்தை ஹஸ்ரத் முஆவியா பின் அபூஸுஃப்யான் எடுத்துரைக்கின்றார்கள்: மற்ற மக்களைப் போன்று நானும் எனது தந்தையுடன் அந்த இடத்தை அடைந்திருந்தேன். எனது தந்தை குபைப்(ரலி) அவர்களின் துஆவினால் பதற்றமடைந்து விட்டதை நான் கண்டேன். அன்னார் என்னை நிலத்தில் படுக்க வைப்பதற்காக மிகவும் அழுத்தத்துடன் பூமியின் பக்கம் இழுத்தார்கள். நான் முகங்குப்புற விழுந்து விட்டேன். நான் அவ்வாறு விழுந்து விட்டதன் காரணமாக எனக்கு எந்த அளவிற்கு பெரிய காயம் ஏற்பட்டது என்றால், நான் நீண்ட காலம் வரை அதன் வேதனையை உணர்ந்து வந்தேன். ஹுவைதிப் பின் அப்துல் உஸ்ஸா மக்கா வெற்றி கொள்ளப்பட்ட வருடத்தில் முஸ்லிம் ஆகிவிட்டிருந்தார்கள். அன்னார் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் குபைப் (ரலி) அவர்களின் துஆவின் சப்தத்தைக் கேட்ட உடனேயே நான் உடனடியாக காதுகளில் விரல்களை நுழைத்து விட்டேன். மேலும் அங்கிருந்து ஓடி விட்டேன். அன்னாரின் அந்த துஆவின் சப்தம் எனது காதுகளை பின் தொடர்ந்து வந்து விடுமோ என்று நான் அஞ்சிக் கொண்டிருந்தேன். ஹக்கீம் பின் ஹிஸாம் அறிவிக்கின்றார்: நான் ஹஸ்ரத் குபைப் (ரலி) அவர்களின் சாபத்திற்கு அஞ்சி மரங்களுக்கு பின்னால் ஒளிந்து கொண்டேன். ஹுபைர் பின் முஃதிம் கூறுகின்றார்: நான் அந்த நாளன்று ஹஸ்ரத் குபைப் (ரலி) அவர்களின் சாபத்தை எதிர் கொள்வதற்கு துணிவு கொண்டிருக்கவில்லை. நான் பயந்து மக்களுக்கு பின்னால் மறைந்து கொண்டேன். நவ்ஃபல் பின் முஆவியா தியலீ மக்கா வெற்றி கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தின் போது முஸ்லிம் ஆகிவிட்டார். அவர் கூறுகின்றார்: குபைப் சபித்த அந்த நாளில் நானும் இருந்தேன். அன்னாரின் சாபத்தால் அங்கிருந்த மக்களில் எவரும் உயிர் பிழைக்க மாட்டார் என்ற உறுதி எனக்கு முழுமையாக இருந்தது. நான் எழுந்து நின்றிருந்தேன். அன்னாருடைய சாபத்திற்கு அஞ்சி விட்டேன். மேலும் பூமியின் பக்கம் குனிந்து விட்டேன். குறைஷிய மக்களில் அந்த சாபத்தைக் குறித்து மிகவும் பேசப்பட்டுக் கொண்டிருந்தது. ஒரு மாதம் அல்லது அதற்கும் கூடுதலான காலம் வரை அவர்களுடைய சபைகளில் குபைப் (ரலி) அவர்களின் சாபத்தைப் பற்றிய அச்சம் சூழ்ந்திருந்தது. மேலும், அது குறித்து அவர்கள் பல வகையில் விவாதித்துக் கொண்டிருந்தனர்.(ஸீரத் என்ஸைக்லோபீடியா, தொகுதி 6, பக்கம் 470 - 471, தாருஸ் ஸலாம் ரியாழ், ஹிஜ்ரி 1434)

ஓர் அறிவிப்பில் வருகின்றது: அந்தக் கூட்டத்தில் ஸயீத் பின் ஆமிர் என்ற ஒரு நபரும் கலந்து கொண்டிருந்தார். இந்த நபர் பிற்காலத்தில் முஸ்லிமாகிவிட்டார். மேலும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலம் வரை அவருடைய நிலை இவ்வாறாக இருந்தது. அதாவது, ஹஸ்ரத் குபைப் (ரலி) அவர்களின் சம்பவம் அவருக்கு நினைவு வரும்போதெல்லாம் அவருக்கு மயக்க நிலை ஏற்பட்டு விடும். (ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் எம். ஏ (ரலி) அவர்களின் நூல் ஸீரத் காத்தமுன்னபிய்யீன், பக்கம் 515 -516)

தற்போது குறிப்பிடப்பட்ட ஸயீத் பின் ஆமிரைக் குறித்து இவ்வாறு குறிப்பு கிடைக்கின்றது: அதாவது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலத்தில் அவர் சிரியா நாட்டில் ஓரிடத்தில் அதிகாரியாக நியமிக்கப்பட்டார். மேலும் சில நேரங்களில் அவருக்கு மக்களுக்கு மத்தியிலேயே திடீரென மயக்கம் ஏற்பட்டு விடும். நோயாளியான இவரை நீங்கள் அதிகாரியாக நியமித்துள்ளீர்கள் என்று மக்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் புகார் செய்தனர். ஒருமுறை அவர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை சந்திப்பதற்காக வந்தார். அப்போது, அபூ ஸயீதே! உங்களுக்கு ஏதேனும் நோய் தாக்கியுள்ளதா? என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவரிடம் கேட்டார்கள். அதற்கு, அமீருல் முமினீன் (ரலி) அவர்களே! எனக்கு எந்த வகையான நோயும் இல்லை ; ஆயினும் ஹஸ்ரத் குபைப் (ரலி) அவர்கள் கொலை செய்யப்பட்ட அந்த நேரத்தில் அங்கு இருந்த மக்களில் நானும் ஒருவனாக இருந்தேன்; தற்போது எனக்கு ஹஸ்ரத் குபைப் (ரலி) அவர்களின் அந்த சாபத்தைப் பற்றி நினைவு வந்து விடும்போது அச்சத்தால் எனக்கு மயக்கம் ஏற்பட்டு விடுகின்றது என்று அவர் கூறினார்.

(அஸ்ஸீரத்துன் நுபுவ்வத் லி இப்னி ஹிஷாம்,பாகம் 2, பக்கம் 150, தாருல் மஃருஃபா, பெய்ரூத், 2000-ம் ஆண்டு)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் குபைப் (ரலி) அவர்களின் உடலை சிலுவையிலிருந்து இறக்குவதற்காக ஒரு குழுவை அனுப்பி வைத்தது தொடர்பாக இவ்வாறு குறிப்பு கிடைக்கின்றது:

அறிவிப்பில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது: அதாவது அந்த உடல் அங்கேயே தொங்கிக் கொண்டிருக்க வேண்டும்; மேலும் அங்கே வீணாகி விட வேண்டும்; மேலும் கெட்டு அழுகி விட வேண்டும் என்பதற்காக குறைஷிகள் சிலுவையின் காவல் பணிக்காக 40 நபர்களை நியமித்திருந்தார்கள். எவ்வாறு இருப்பினும், இறைத் தூதர் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் மிக்தாத் (ரலி) அவர்களையும், ஹஸ்ரத் ஸுபைர் பின் அவ்வாம் (ரலி) அவர்களையும் மக்காவை நோக்கி அனுப்பி வைத்தார்கள். அவர்கள் சென்று ஹஸ்ரத் குபைப் (ரலி) அவர்களின் உடலை சிலுவையிலிருந்து இறக்கி கொண்டு வருவதற்காக அவர்களை அனுப்பி வைத்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு தகவல் கிடைத்திருந்தது. அநேகமாக அல்லாஹ் அது குறித்து அறிவித்துக் கொடுத்திருப்பான்.

எவ்வாறு இருப்பினும், ஓர் அறிவிப்பின் அடிப்படையில், இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களில் எவர் குபைபை சிலுவையிலிருந்து இறக்குவாரோ அவருக்கு சொர்க்கம் கிடைக்கும். எனவே யார் அதற்கு தயாராக இருக்கின்றார்? அப்போது, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நானும் எனது தோழர் மிக்தாத் பின் அஸ்வதிய்யாவும் இந்தப் பணியை செய்வோம் என்று ஹஸ்ரத் ஸுபைர் பின் அவ்வாம் (ரலி) அவர்கள் கூறினார்கள். இவர்கள் இருவரும் அந்த இடத்தை அடைந்தபோது, எங்கு ஹஸ்ரத் குபைப் (ரலி) அவர்களின் உடல் இருந்ததோ அங்கு நாற்பது நபர்கள் இருப்பதை இவர்கள் கண்டனர்.ஆனால், அவர்கள் அனைவருமே சுயநினைவின்றி தூங்கிக் கொண்டிருந்தனர். அவர்கள் இருவரும் குபைப் (ரலி) அவர்களை கீழே இறக்கினார்கள். மேலும் இது ஹஸ்ரத் குபைப் (ரலி) அவர்களின் ஷஹாதத் நிகழ்ந்ததற்கு 40 நாட்கள் பிறகு நடைபெற்ற நிகழ்வாகும். ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்கள் குபைப் (ரலி) அவர்களின் உடலை தமது குதிரையின் மீது வைத்து விட்டார்கள். மேலும் அவர்கள் இருவரும் சென்று விட்டார்கள். எந்த அளவுக்கு என்றால், நிராகரிப்பாளர்களுக்கு தகவல் கிடைத்தவுடன் அவர்கள் ஹஸ்ரத் குபைப் (ரலி) அவர்களின் உடல் காணாமல் போனதைக் கண்டனர். அப்போது அவர்கள் இந்தத் தகவலை குறைஷியர்களுக்கு தகவல் கொடுத்தனர். அதனால் அவர்களில் எழுபது சவாரிகள் புறப்பட்டனர். முஸ்லிம்களை பின்தொடர்வதற்காக மேலும் கூடுதல் நபர்களை சேர்த்துக் கொண்டனர். பின்னர் அந்த குறைஷிய நபர்கள் அந்த இரு ஸஹாபிகளுக்கு அருகில் சென்றடைந்த போது ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் குபைப் (ரலி) அவர்களின் உடலை நிலத்தில் வைத்து விட்டார்கள். மேலும் ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்கள் தமது தலையிலிருந்து தமது தலைப்பாகையை கழற்றினார்கள். மேலும், நான் ஸுபைர் பின் அவ்வாம் ஆவேன்; மேலும் இவர் எனது தோழர் மிக்தாத் பின் அஸ்வத் ஆவார்; நாங்கள் இருவரும் எப்படிப்பட்ட சிங்கங்கள் என்றால் நாங்கள் எங்களது பிள்ளைகளை பின்னால் விட்டு விட்டு வந்துள்ளோம்; நீங்கள் விரும்பினால் நாங்கள் அம்புகளால் உங்களை வரவேற்போம்; மேலும் நீங்கள் விரும்புனீர்கள் என்றால் உங்கள் மீது நாங்கள் தாக்குதல் தொடுப்போம்; நீங்கள் விரும்பினீர்கள் என்றால் இங்கிருந்தே நீங்கள் (திரும்பி) சென்று விடுங்கள் என்று கூறினார்கள்.

இதனைக் கேட்ட அந்த இணை வைப்பாளர்கள் திரும்பி சென்று விட்டனர். மேலும் அதன் பிறகு ஹஸ்ரத் ஸுபைர் பின் அவ்வாம் (ரலி) அவர்கள் பார்த்த போது ஹஸ்ரத் குபைப் (ரலி) அவர்களின் உடல்

MUNEEF
TRADING COMPANY
IRON & STEEL
MERCHANT
Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716
89/11, Shanmugapuram
5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9

காணாமல் போயிருந்தது. பூமி அதனை விழுங்கி விட்டது போன்று இருந்தது. அதனால் அன்னாருக்கு بَلِيْعُ الْاَرْض என்ற பெயரும் பிரபலமாகி விட்டது. அதாவது பூமி விழுங்கி விட்ட அந்த நபர் என்பது அதன் பொருளாகும். உடல் காணாமல் போனது தொடர்பான இப்படிப்பட்ட அறிவிப்புகள் மிகவும் விநோதமானவையாக தெரிகின்றன. எனினும் ஓர் அறிவிப்பு இருக்கின்றது. அதனை நான் பின்னர் எடுத்துரைப்பேன். உடல் எப்படி மறைந்து போனது? என்று அதிலிருந்து தெரிய வருகின்றது.

எவ்வாறு இருப்பினும், ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் மிக்தாத் (ரலி) ஆகியோர் மீது வானவர்கள் பெருமிதம் கொண்டது தொடர்பாக எழுதப்பட்டுள்ளது: அதாவது இதன் பிறகு, ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் மிக்தாத் (ரலி) ஆகியோர் மதீனாவில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் சென்றடைந்தனர். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்)அவர்களுக்கு அருகில் ஜிப்ராயீல் இருந்தார்கள். முஹம்மத் (ஸல்) அவர்களே! தங்களது ஸஹாபிகளில் இரு நபர்கள் மீது வானவர்களும் பெருமிதம் கொள்கின்றனர் என்று ஜிப்ராயீல் அவர்கள் கூறினார்கள். ( ஸீரத் ஹல்பியா, தொகுதி 3, பக்கம் 236. தாருல் குதுபில் இல்மியா - 2009ம் ஆண்டு)

ஸீரத் நூல்களில் ஹஸ்ரத் குபைப் (ரலி) அவர்களின் உடலை கொண்டு வருவதற்காக மற்றொரு குழுவினர் அனுப்பப்பட்டதாகவும் குறிப்பு கிடைக்கின்றது. எனவே ஓர் அறிவிப்பின் அடிப்படையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அம்ர் பின் உமையா (ரலி) அவர்களை தனியாக உளவாளியாக அனுப்பி வைத்தார்கள். அன்னார் கூறுகின்றார்கள்: நான் ஹஸ்ரத் குபைப் (ரலி) அவர்களை சிலுவைக்கு அருகில் கண்டேன். நான் உளவாளிகளிடம் அஞ்சிக் கொண்டிருந்தேன். நான் சிலுவையின் மீது ஏறினேன். நான் ஹஸ்ரத் குபைப் (ரலி) அவர்களின் உடலை அவிழ்த்தேன். அப்போது நிலத்தில் சென்று விழுந்தது. நான் சிறிது நேரம் விலகி நின்றேன். நான் எனக்குப் பின்னால் சப்தம் வருவதைக் கேட்டேன். நான் பார்த்த போது அங்கு ஹஸ்ரத் குபைப் (ரலி) அவர்களின் உடல் அங்கு இருக்கவில்லை. பூமி அதனை விழுங்கி விட்டதைப் போன்று இருந்தது. இன்று வரை அவரைக் குறித்து எந்த அடையாளமும் கிடைக்கவில்லை. (ஸுபுலுல் ஹுதா வர் ரஷாத், தொகுதி 6, பக்கம் 45, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத்)

எவ்வாறு இருப்பினும் நான் கூறியது போன்று பலதரப்பட்ட அறிவிப்புகள் இருக்கின்றன.

இந்த அறிவிப்பு சற்று சரியானதாக தெரிகின்றது. அதாவது அன்னார் (ரலி) பின்னால் ஓடிய போது அவர்கள் அதாவது ஹஸ்ரத் ஜப்பார் (ரலி) அவர்கள் உடலை ஆற்றில் வீசிவிட்டார்கள். மேலும் அந்த உடலை நதி இழுத்துச் சென்று விட்டது. நதியின் வேகமான தண்ணீர் உடல்களை அடித்துச் செல்வது நிகழ்கின்றது. ஆக, இது குறித்து பல்வேறு அறிவிப்புகள் வருகின்றன.

எவ்வாறு இருப்பினும், அன்னாரது உடல் நிராகரிப்பாளர்களின் கைகளில் கிடைக்கவில்லை. மேலும், பூமி விழுங்கி விட்டது; மாயமாகி விட்டது என்றே கூறுகின்றனர். இதே பெயரால் அதாவது بَلِيْعُ الْاَرْض என்ற பெயரால் பின்னர் அன்னார் (ரலி) பிரபல்யம் அடைந்திருந்தார்கள். உடலை பூமி விழுங்கியவர் என்ற பெயரால் அன்னார் பிரபல்யம் அடைந்திருந்தார்கள். அந்த நிராகரிப்பாளர்கள் என்ன செய்ய வேண்டும் என்று விரும்பியிருந்தார்களோ அதனை அவர்களால் செய்ய முடியாமல் போனது. மேலும் இவ்வாறு உடலை அல்லாஹ் அவமரியாதை செய்யப்படுவதிலிருந்து காப்பாற்றி விட்டான்.

அல்லாஹ் இவ்வாறும் தனது அன்பர்களை பாதுகாத்து வந்தான். ஏராளமான சந்தர்ப்பங்களில் அவன் உடல்களை பாதுகாத்து வந்தான். கடந்த முறை நான் ஒரு சம்பவத்தை கூறியிருந்தேன். குளவிகள் மற்றும் தேனீக்களின் மூலமாக உடலை பாதுகாத்து வைத்திருந்தான். எதிரிகளால் அவமரியாதை செய்ய முடியவில்லை (அத்தப்காத்துல் குப்ரா, தொகுதி 3, பக்கம் 358, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத், 1990-ம் ஆண்டு பதிப்பு)

எவ்வாறு இருப்பினும் இவர்கள் எப்படிப்பட்ட மக்களாக இருந்தனர் என்றால் அவர்கள் அல்லாஹ்வின் மீது நேசம் கொள்ளக் கூடியவர்களாகவும், அல்லாஹ்விற்காக தியாகம் செய்யக் கூடியவர்களாகவும் இருந்தனர். மேலும் அல்லாஹ்வும் அவர்களுக்கு கண்ணியமளித்து வந்தான். மேலும் பின்னர் அவர்கள் மரணித்தப் பிறகும் அவர்களின் உடல்களை பாதுகாப்பாக வைத்தான். இந்த ஸரிய்யாவின் குறிப்பு இங்கு நிறைவடைகின்றது.

துஆவின் பக்கம் நான் கவனமூட்டி வருகின்றேன். பாலஸ்தீனியர்களுக்காக குறிப்பாக துஆ செய்யுங்கள். தற்போதோ (நிலைமை) உச்சத்தை அடைந்து விட்டது. இது எங்களுடைய ரெட் லைனாக இருக்கும் என்று ரஃபா பகுதியைக் குறித்து முன்னர் அமெரிக்கா கூறிவந்தது. இல்லை ; தற்போதும் முடிவடையவில்லை என்று தற்போது கூறுகின்றனர். அவர்களுடைய ரெட்லைனின் அளவுகோல் என்னவென்று தெரியவில்லை. எத்தனை லட்சம் மக்களை அவர்கள் கொலை செய்ய இருக்கின்றார்களோ? அதன் பிறகு தான் அவர்களிடம் ஏதாவது அசைவு ஏற்படும் போல. அல்லாஹ் இந்த அநீதியாளர்களிடமிருந்து உலகிற்கு இரட்சிப்பை வழங்குவானாக! மேலும் அப்பாவி பாலஸ்தீனியர்களுக்கும் இரட்சிப்பை வழங்குவானாக! இதே போன்று சூடான் மக்களுக்காகவும் துஆ செய்யுங்கள். அங்கோ அவர்கள் தங்களது சொந்த சமுதாயத்தின் மக்களை சுயமே கொன்று வருகின்றனர். முஸ்லிம்களை முஸ்லிம்களே கொல்கின்றனர். அல்லாஹ் அவர்களுக்கு அறிவை வழங்குவானாக. மேலும் இவர்கள் அல்லாஹ்வின் பிடியிலிருந்து தப்பிப்பவர்களாக இருக்கட்டுமாக. மேலும் தங்களை முஸ்லிம்கள் என்று கூறிக் கொள்ளும் இவர்கள் அல்லாஹ்வின் கட்டளைகளின்படி அமல் செய்யக் கூடியவர்களாகவும் இருக்கட்டுமாக

ஏமன் நாட்டின் (இறை வழிக்) கைதிகளுக்காக துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களின் விடுதலைக்கான ஏற்பாட்டை செய்வானாக.

பாகிஸ்தானின் அஹ்மதிகளுக்காக துஆ செய்யுங்கள். அங்கும் நிலைமைகள் மேலும், கீழும் ஆகிவருகின்றன. மேலும் தற்போதோ பெருநாளும் அருகில் வந்து கொண்டிருக்கின்றது. எனவே மவ்லவிகள் இந்த நாட்களில் இன்னும் சுறுசுறுப்பாகி விடுகின்றனர். அல்லாஹ் ஒவ்வோர் அஹ்மதியையும் எல்லாத் தீங்கிலிருந்தும் பாதுகாப்பாக வைப்பானாக. இறை வழிக் கைதிகளின் விடுதலைக்கான ஏற்பாட்டையும் விரைவில் செய்வானாக!

தற்போது நான் ஜுமுஆவிற்கு பிறகு ஜனாஸா தொழுகையையும் தொழ வைப்பேன். முதலாவது ஜனாஸா நமது ஜமாஅத்தின் முரப்பி சவ்த்ரி முனீர் அஹ்மத் ஸாஹிப் அவர்களுடையதாகும். அன்னார் எம்.டி ஏ இன்டர்நேஷனல் டெலி ரிப்போர்ட் அமெரிக்காவின் டைரக்டர் ஆக இருந்தார்கள். கடந்த நாட்களில் 73 வயதில் மரணமடைந்துள்ளார்கள். اِنَّا لِلّٰهِ وَاِنَّاۤ اِلَيْهِ رٰجِعُوْنَ

அன்னாரின் குடும்பத்தில் அஹ்மதிய்யத் அன்னாரின் தாய்வழிப் கொள்ளுப் பாட்டனார் ஹஸ்ரத் மவ்லவி ஃபஸ்ல் தீன் ஸாஹிப் (ரலி) அவர்களின் மூலமாக தோன்றியது. அன்னாருடைய பெயர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் 313 ஸஹாபிகளின் பட்டியலில் இரண்டாவது இடத்தில் உள்ளது. சவ்த்ரி முனீர் ஸாஹிப் 1978-ம் ஆண்டு ஜாமிஆ அஹ்மதிய்யாவிலிருந்து ஷாஹித் பட்டத்திற்கான தேர்வில் தேர்ச்சிப் பெற்றார்கள். பின்னர் பாகிஸ்தானில் பல்வேறு இடங்களில் முரப்பியாக தொண்டாற்றியுள்ளார்கள். பின்னர் தலைமையக மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் முஃதமித் என்ற ரீதியிலும் அன்னாருக்கு தொண்டாற்றுவதற்கு நற்பேறு கிடைத்துள்ளது. 1981-ம் ஆண்டு அன்னார் அமெரிக்காவிற்கு அனுப்பப்பட்டார்கள். 1990 வரை அங்கு இருந்தார்கள். பின்னர் அதன் பிறகு மீண்டும் திரும்பி வந்து விட்டார்கள். மேலும் மரணம் வரை சிறப்பாக செயல்பட்டார்கள். முதலில் அங்கிருந்து டிரான்ஸ்மிட் செய்வதற்கான இந்த ஒரு சிறிய ஸ்டுடியோ இருந்தது. பின்னர் அதில் விரிவாக்கம் செய்யப்பட்டது. மேலும் முறையாக தென் அமெரிக்கா மற்றும் வட அமெரிக்காவிற்கு என ஒரு தனியான துறை திறக்கப்பட்டது. மேலும் அங்கு நான் அன்னாரை MTA டைரக்டராக ஆக்கினேன். மேலும் மிகவும் உழைப்புடன், பெரும் முயற்சியுடனும், உலக அறிவுகளால் கிடைத்திராத பெரும் தொழில்நுட்பத் திறமையுடனும் அன்னார் தொண்டாற்றினார்கள். அதாவது குறிப்பாக அன்னார் தொழில்நுட்பத் துறையில் எந்தவொரு டிகிரியும் படிக்கவில்லை. ஆனால் இந்தப் பணி செய்வதற்கு அன்னாருக்கு ஆர்வம் இருந்தது. எனவே சுயமே அந்தக் கல்வியைப் பெற்றுக் கொண்டார்கள். மேலும் இந்த டெலிபோர்ட் துறையை அன்னார் அழகிய முறையில் நடத்தினார்கள். மேலும் எல்லா வகையிலும் அதனை தொழில் நுட்ப ரீதியிலும் உயர் தரமான அந்தஸ்தில் நிலைநிறுத்தினார்கள். அன்னார் பின்விட்டுச் சென்றவர்களில் அன்னாருடைய மனைவி மட்டுமின்றி ஒரு மகனும்,இரண்டு மகள்களும் அடங்குவர்.

அன்னாரின் பிள்ளைகள் கூறியுள்ளனர்: எப்போதும் இறைவன் மீது முழுமையான நம்பிக்கை கொள்ளக் கூடியவராக இருந்தார்கள். கடினமான தருணங்களில் துஆவின் பக்கம் கவனமூட்டி வந்தார்கள். என்ன காரணிகள் இருக்கின்றனவோ அவற்றை பயன்படுத்துங்கள்; பின்னர் விவகாரத்தை எப்போதும் அல்லாஹ்விடம் விட்டு விடுங்கள் என்றே கூறிவந்தார்கள். விருந்து உபசரிப்பு பண்பு மிகவும் சிறப்பான முறையில் இருந்தது. எப்போதும் வீடு

விருந்தினர்களுக்காக திறந்தே இருக்கும்; கிலாஃபத்துடன் முழுமையாக தொடர்பு வைப்பதற்கு எப்போதும் பிள்ளைகளுக்கு அறிவுறுத்தி வருவார்கள்.

MTAவிற்காக அன்னாரிடம் என்னவெல்லாம் திறமைகள் இருந்தனவோ அவற்றை பயன்படுத்துவர். இன்னும் கூறப்போனால் பிள்ளைகள் கூறுகின்றனர்: பல்வேறு நேரங்களில் நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையில் இருந்த போதும் கூட; அன்னார் பல்வேறு நேரங்களில் நீண்ட காலம் நோய்வாய்ப்பட்டு இருந்து வந்தார்கள்; ஆக மருத்துமனையில் சேர்க்கப்பட்டாலும் கூட MTA விற்காக பணி செய்து கொண்டிருந்தார்கள். சுருக்கமாக, ஒரு வாழ்வை அர்ப்பணித்தவருக்கான உயர்தரமான முன்மாதிரியாக இருந்தார்கள்.

அமெரிக்காவின் அமீர் ஜமாஅத் மிர்ஸா மஃக்ஃபூர் அஹ்மத் ஸாஹிப் எழுதுகின்றார்கள்:

தமது துறையை மேம்படுத்துவதற்காக உழைப்பு மற்றும் கவனத்துடன் பணி செய்து வந்தது மட்டுமின்றி, தமது நேரத்தையும் அறிவையும் ஜமாஅத்தின் இதர பணிகளுக்கு கொடுப்பதற்கும் ஒருபோதும் தயங்கியதில்லை. சில ஜமாஅத் பணிகளில் அன்னார் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியுடனும், கவனத்துடனும் உதவி செய்தார்கள். ஜமாஅத்தின் நலன் தொடர்பாக ஏதாவது ஒரு விவகாரம் அன்னாரின் கவனத்திற்கு வந்தால் பின்னர் அன்னார் ஜமாஅத்தின் நிர்வாகத்துடன் தொடர்பு கொள்வார்கள்; மேலும் அதன் பக்கம் கவனமூட்டி வந்தார்கள். ஜமாஅத் அமைப்புடன் முழுமையான ஒத்துழைப்பும் அதன் முக்கியத்துவமும் அன்னாரின் சொல் மற்றும் செயலிலிருந்து சிறப்பாக தெரிய வரும். கிலாஃபத்திற்காக உயிரை அர்ப்பணிக்கக் கூடியவராகவும், முழுமையாக கட்டுப்படக் கூடியவராகவும் அன்னார் இருந்தார்கள். காலத்தின் கலீஃபாவின் வழிகாட்டுதல்களை புரிவதற்கும். அதன்படி செயல்படுவதற்கும் எந்நேரமும் தயாராக இருந்தார்கள். கூறுகின்றார்கள்: நான் எப்போதும் அன்னாரை கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் விருப்பங்கள் மற்றும் எதிர்பார்ப்புகளின்படி முழு கவனத்துடன் அமல் செய்யக் கூடியவராக கண்டுள்ளேன்.

அமீர் ஜமாஅத் புர்கினாஃபாஸ்ஸ் கூறுகின்றார்கள். இவர்கள் மர்ஹூமின் உறவினரும் ஆவார்கள். அன்னார் எழுதுகின்றார்கள்: குழந்தைப் பருவத்தின் ஒரு சம்பவம் பிரசித்திப் பெற்றதாகும். அதாவது அன்னார் பிறந்து சில மாதங்களே ஆகியிருந்தது. அப்போது அன்னார் கடுமையாக நோய்வாய்ப்பட்டு விட்டார்கள். மரணத்தின் அடையாளங்கள் தென்படத் தொடங்கின. மவ்லானா குலாம் ரஸூல் ஸாஹிப் ராஜீகீ (ரலி) அவர்கள் அந்நாட்களில் அன்னாருடைய பகுதியில் தங்கியிருந்தார்கள். எனவே மர்ஹூமின் தாயார் அன்னார் நோய்வாய்ப்பட்டிருந்ததால் பதற்றமடைந்து மவ்லவி ஸாஹிப் (ரலி) அவர்களிடம் அன்னாரை கொண்டு சென்றார்கள். மேலும் மவ்லவி ஸாஹிபின் மடியில் வைத்தவாறு கூறினார்கள்: மவ்லவி ஸாஹிப்! இவர் சென்று விட்டார்; என்று கூறி அழுது கொண்டே இருந்தார்கள். மவ்லவி ஸாஹிப் குழந்தையை தூக்கினார்கள்; மேலும், இவர் நலம் பெற்று விடுவார்; இவரை வக்ஃப் செய்து விடுங்கள் என்று கூறினார்கள். இவ்வாறு அன்னார் குழந்தைப் பருவத்திலேயே வக்ஃப் ஆகிவிட்டார்கள். நான் வக்ஃப் செய்து விடுவேன் என்று அங்கு அன்னாரின் தாயார் உறுதி எடுத்தார்கள்.

நான் படிப்பு போன்றவற்றில் சிறந்து விளங்கவில்லை என்பதினால் அசெம்ளியின் போது சூரா ஃபாத்திஹாவை ஓதி வரும்படி எனக்கு எனக்கு மீர் ஸாஹிப் அறிவுறுத்தி இருந்தார்கள். நான் அதனை நிரந்தரமாக செய்து வந்தேன் என்று அன்னாரே கூறிவந்தார்கள்.

ஷம்ஷாத் நாஸிர் ஸாஹிப் முரப்பி கூறுகின்றார்கள். அநேகமாக அனைவருமே அன்னாரின் சிறப்பாக இதனையே எழுதியுள்ளனர். அதாவது அன்னார் கிலாஃபத்தின் கட்டளைகளுக்கு முழுமையாக கட்டுப்பட்டு செயல்படக் கூடியவராக இருந்தார்கள் என்று எழுதியுள்ளனர். பெரும்பாலும் நோயுற்று இருந்தபோதிலும் யாரிடமும் ஒருபோதும் கூறவில்லை. மேலும் தான் ஒரு துன்பத்தில் இருப்பதாக யாரையும் ஒருபோதும் உணரக் கூட செய்ததில்லை. எனவே எப்போதும் தனது பணியை மட்டும் கருத்தில் கொண்டு செயல்பட்டார்கள். மேலும் மிகவும் கடின உழைப்புடன் அதிலேயே வாழ்ந்து வந்தார்கள். எல்லா வகையான விவகாரங்களிலும் மிகவும் புலமை இருந்தது. எல்லா விஷயங்களைக் குறித்தும் ஆழமாக ஆராய்ந்து பார்ப்பார்கள். பின்னர் முரப்பிமார்களுக்கும் கூட வழிகாட்டல் வழங்குவார்கள். சிறந்த நிர்வாகியாக இருந்தார்கள். மேலும் உடன் பணிபுரிபவர்களுடன் மிகவும் பரிவுடன் நடப்பவராக இருந்தார்கள். அன்னார் விருந்து உபசரிப்பும் செய்து வந்தார்கள்.

பிள்ளைகள் மட்டும் எழுதவில்லை. அந்நியர்களும் கூட உணர்ந்துள்ளனர். எல்லாரிடமும் சிரித்த முகத்துடன் சந்திப்பது அன்னாரின் பணியாக இருந்தது. இயல்பில் மிகவும் மென்மை இருந்தது. ஆனால், தைரியத்துடன் பணியாற்றக் கூடியவராக இருந்தார்கள். அல்லாஹ் அன்னாரின் சிந்தனையில் விநோதமான திறமைகளை வைத்திருந்தான். முரப்பியாக இருந்தார்கள். எனினும், ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் அன்னாரை எர்த் ஸ்டேஷனில் பணி நியமனம் செய்தார்கள். எனவே எல்லா விஷயங்களையும் ஆழத்தில் சென்று ஆய்வு செய்தார்கள். மேலும் பின்னர் அதனை உச்சபட்ச வெற்றி வரை கொண்டு சென்றார்கள்.

அங்கிருந்து எல்லா நிகழ்ச்சிகளும் அமெரிக்காவில் டிரான்ஸ்மிட் ஆக வேண்டும் என்பதற்காக புதிய டிஷ் பொருத்துவதற்கான நடவடிக்கை துவங்கிய போது, சம்பந்தப்பட்ட துறைகளிடமிருந்து அனுமதி பெற வேண்டி இருந்தது. அங்கிருந்து இன்ஸ்பெக்டர் வந்தார். மேலும் அவர் அனுமதி கொடுக்கவில்லை. மேலும் படிவத்தில் கையொப்பம் செய்யவில்லை. எவ்வாறு இருப்பினும், பின்னர் அன்னார் எனக்கு எழுதினார்கள். நீங்கள் முயற்சி செய்து கொண்டு இருங்கள்; அல்லாஹ் உதவி செய்வான் என்று நான் கூறினேன். சில காலத்திற்கு பிறகு அங்கிருந்து மீண்டும் இன்ஸ்பெக்டர் வந்தார். அவர் கானாவைச் சேர்ந்தவராக இருந்தார். அவர் ஜமாஅத்தின் பெயரைக் கேட்டதும் நான் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பள்ளிக் கூடத்தில் படித்தவன் ஆவேன் என்று அவர் கூறினார். பின்னர் அவர் அங்கேயே அதில் கையொப்பம் இட்டு விட்டார். மேலும் அனுமதி கிடைத்து விட்டது. ஆக, இதுவும் அல்லாஹ்வினுடைய சிறப்பான உதவி ஆகும். அன்னாரின் உழைப்பு மற்றும் துஆவினால் அல்லாஹ் இந்தப் பணியையும் எளிதாக்கி விட்டான்.

லயீக் முஷ்தாக் ஸாஹிப் முரப்பி கூறுகின்றார்கள்: அன்னார் தெற்கு அமெரிக்காவின் நாடுகளில் சுற்றுப் பயணம் செய்தார்கள். மேலும் எம்.டி ஏவைக் குறித்து தகவல்களைப் பெற்றார்கள். மூன்று நாட்கள் சூரைனம் பகுதியில் தங்கியிருந்தார்கள். மேலும் அன்னார் கூறினார்கள்: என்னை காலத்தின் கலீஃபா ஒரு நோக்கத்திற்காக இங்கு அனுப்பியுள்ளார்கள். நான் இந்தப் பணியை மட்டுமே செய்வேன்; எனவே வேறு எந்த சுற்றுப் பயணத்திற்கான நிகழ்ச்சியும் இடம்பெறாது என்று கூறினார்கள். மேலும் முழு நேரத்தையும் MTA ஒளிபரப்பை சோதனைசெய்வது மற்றும் குடும்பங்களில் சுற்றுப்பயணம் செய்து ஜமாஅத் உறுப்பினர்களுக்கு MTA விலிருந்து பயன் பெறுவதற்கு அறிவுரை செய்வது. MTA ஒளிபரப்பின் போது ஏற்படக் கூடக் கூடிய சிக்கல்களை தீர்ப்பதற்கான வழிமுறைகளை இளைஞர்களுக்கு புரிய வைப்பது போன்ற பணிகளில் கழித்தார்கள். இவர்கள் கூறுகின்றார்கள்:

ஒரு முரப்பி தன்னிடம் புகார் கூறினார் என்று அன்னார் என்னிடம் ஒருமுறை கூறினார்கள்.

சிலமுறை முரப்பிமார்களும் இதுபோன்ற புகார்களை செய்துவிடுகின்றனர். அதாவது எங்களுக்கு ஏழு வருடம் ஜாமிஆவில் கற்றுக் கொடுக்கப்பட்டது. தற்போது நாங்கள் அலுவலகத்தில் பணியமர்த்தப்பட்டுள்ளோம் என்று தற்போதும் கூட புகார் கூறிவிடுகின்றனர். ஆக நான் அதாவது சவ்த்ரி ஸாஹிப் அவருக்கு இவ்வாறு பதில் கூறினார்கள். யாரிடம்,எப்போது, என்ன பணி வாங்க வேண்டும் என்பதை காலத்தின் கலீஃபா நன்கு அறிவார்கள்; என்று அன்னார் பதிலளித்தார்கள். கூறினார்கள்:நானும் ஜமாஅத்தின் முபல்லிக் ஆவேன். ஆனால், கடந்த பதினைந்து வருடங்களாக காலத்தின் கலீஃபாவின் கட்டளைக்கு ஏற்ப டெலிபோர்ட் துறையில் பணி செய்து கொண்டிருக்கின்றேன். கையில் சுத்தியல் போன்றவற்றை வைத்திருக்கின்றேன். டெக்னிகல் பணியையும் நான் செய்கின்றேன். நீங்கள் தெருக்களில் இறங்கி சுத்தம் செய்யுங்கள் என்று காலத்தின் கலீஃபாவின் சார்பாக என்னிடம் கூறப்பட்டால் பின்னர் நான் திறந்த மனதுடன் அந்தப் பணியையும் செய்வேன். சுயம் என்னை நான் மண்ணாக ஆக்கிக் கொள்வேன்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களும் ஒருமுறை கூறினார்கள்: ஒருகாலம் வரும் ; அப்போது நமக்கு முபல்லிஃக்மார்களை இந்தப் பணிகளில் நியமிக்க நேரிடும். நமது அலுவலகங்களில் பணி செய்யக் கூடியவர்கள் கூட முரப்பிமார்களாக இருப்பர். மற்ற கிளர்கில் ஆட்களை கொண்டு பணிகள் வாங்க வேண்டும் என்பதல்ல. எனவே தம்மிடமிருந்து என்ன பணி வாங்கப்படுகின்றது? என்பதை ஒவ்வொரு

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

முரப்பியும் தமது எண்ணங்களிலிருந்து வெளியேற்றி விட வேண்டும்; எங்கும், என்ன தொண்டு வேண்டுமானாலும் அவர்களிடமிருந்து பெறப்பட முடியும். ஜாமிஆவில் படித்துள்ளனர் என்றால் நல்ல விஷயம் ஆகும்; ஒரு மார்க்க அறிவு அவர்களுக்கு கிடைத்துள்ளது. அந்த மார்க்க அறிவை பயன்படுத்திக் கொண்டே இருக்க வேண்டும்.

காயிப்கான் அவர்கள் அமெரிக்காவின் MTA ஸ்டுடியோவின் இன்சார்ஜ் ஆவார்கள். கூறுகின்றார்கள்: மர்ஹூம் ஒவ்வொரு பணியையும் முழுமையடைவதற்கு சுயமே முயற்சி செய்து கொண்டிருப்பார்கள். அதன் பதிவுகளை வைப்பது, ஊழியர்களின் நேரங்கள், சைட்டை பார்வையிடுவது, கட்டடத்தின் பணியின் சுத்தம் போன்றவற்றை அன்னார் சுயமே கருத்தில் கொண்டிருப்பார்கள். மேலும், எவ்வாறு இந்த அமைப்பை சிறப்பிலும் சிறப்பானதாக ஆக்குவது? என்ற விஷயத்திலேயே அன்னாரின் கவனம் இருந்து வந்தது. பின்னர் தமது தோழர்களுடனும் மென்மையுடன் நடந்து கொள்வார்கள். உயர் பொறுப்பில் இருந்தார்கள். எனினும், உறுதியான பலம்வாய்ந்த தைரியம் கொண்ட நபராக இருந்தார்கள்.

மிர்ஸா முஹம்மத் அஃப்ஸல் ஸாஹிப் எழுதுகின்றார்கள்: நான் அன்னாரை 56 ஆண்டுகளாக அறிவேன். ஒன்றாகவே அமெரிக்காவிற்கு வந்தோம். கிலாஃபத்தின் விசுவாசியாக இருந்தார்கள். 1974-ம் ஆண்டில் சிறை வாசத்தையும் அனுபவித்தார்கள். தூய்மையும், நன்றியுணர்வும் முழுமையாக நிரம்பியிருந்தார்கள். நேச உணர்வுடன் தொண்டாற்றி வந்தார்கள். பணி செய்யக் கூடிய வழிமுறை முற்றிலும் கட்டுக்கோப்புடன் இருந்து வந்தது. எந்தவொரு தொண்டையும் மறுப்பது என்பது அன்னாரின் இயல்பிலேயே இருக்கவில்லை. எப்போதும் அன்னாரை நான் கிலாஃபத்தின் வலிமை மிக்க உதவியாளராகவே கண்டுள்ளேன்.

ஸஃபர் ஸர்வர் ஸாஹிப் அவர்களும் எழுதுகின்றார்கள்: அமெரிக்காவிலிருந்து டெலிபோர்ட் டிரான்ஸ்மிஸனுடைய ஒளிபரப்பு ஆரம்பமான போது, தொழில்நுட்ப பணியாக இருக்கின்றது; எனவே ஒரு பொறியாளர் வழங்குங்கள் என்று அன்னார் சுயமே ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களிடம் விண்ணப்பம் செய்தார்கள். அப்போது, நீங்கள் சுயமே பொறியாளராக ஆகுவதற்கு முயற்சி செய்யுங்கள் என்று ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் அன்னாரிடம் கூறினார்கள்.

ஆக, பின்னர் அன்னார் சுயமே இந்தப் பணியைக் கற்றுக் கொண்டார்கள். மேலும் அதில் புலமைப் பெற்றார்கள். மேலும் மிகவும் முழு நம்பிக்கையுடன் இந்த அனைத்துப் பணிகளையும் செய்தார்கள். 29 ஆண்டுகள் வரை அன்னார் எம்.டி.ஏ வில் தொண்டாற்றினார்கள். இதன் பின்னரும் கூட இவ்வளவு காலம் அன்னாருக்கு இதய நோயும் இருந்தது. தற்போது வடக்கு அமெரிக்கா மற்றும் தென் அமெரிக்காவில் அன்னாரின் காரணமாகவே MTA நிகழ்ச்சிகள் மிகவும் எளிதாக பார்க்கப்படுகின்றன.

டாக்டர் ஹமீதுர் ரஹ்மான் ஸாஹிப் லாஸ் ஏஞ்சல்ஸ், அமெரிக்காவிலிருந்து எழுதுகின்றார்கள்: 1993-ம் ஆண்டு லாஸ் ஏஞ்சல்ஸில் அன்னாரின் பணி நியமனம் நிகழ்ந்தது. எங்களுடன் இணைந்து சியானோவில் நிலம் வாங்கினார்கள். மேலும் பின்னர் உடனடியாக மஸ்ஜித் கட்டுவதற்கு முயற்சி செய்தார்கள். மர்ஹூம் மிகவும் துணிவு மிக்கவராகவும், தைரியசாலியாகவும், அல்லாஹ்வின் மீது முழுமையான நம்பிக்கை கொண்ட மனிதராகவும் இருந்தார்கள். சியனோ நகரத்தின் மேயர் அவர்களிடம் ஜமாஅத்தை அறிமுகம் செய்து வைப்பதற்காக அவருடைய அலுவலகத்திற்கு சென்றோம். மேலும் அறிமுகம் செய்து வைத்த பிறகு சியானோவில் மஸ்ஜித் கட்டுமானம் குறித்து அன்னார் கூறினார்கள். அப்போது மஸ்ஜித் கட்டப்பட முடியாது என்று மேயர் உடனடியாக கூறினார். மேலும் over my dead body என்று மிகவும் கோபத்துடன் கூறினார். இதைக் கேட்ட உடனேயே சவ்த்ரி ஸாஹிப் அவர்கள் அசாதாரண உத்வேகத்துடன் எழுந்து விட்டார்கள். மேலும் மேயர் ஸாஹிப்! இந்த மஸ்ஜித் அல்லாஹ்வை வணங்கும் இடமாகும்; அது கட்டப்படும் என்று கூறினார்கள். ஆக,அல்ஹம்துலில்லாஹ்! அங்கு மஸ்ஜித் கட்டப்பட்டுள்ளது. மேலும் பின்னர் அதே மேயர் மஸ்ஜிதிற்கு வருகை தந்து மன்னிப்புக் கோரினார். மேலும் பின்னர் அதன் பிறகு பல முறை மஸ்ஜிதிற்கு வந்து கொண்டிருந்தார். மிகவும் துணிச்சல் மிக்க நபராக மர்ஹூம் திகழ்ந்தார்கள்.

ஹமாத் ஸாஹிப் முரப்பி ஆவார். முனீர் ஸாஹிப் அன்னாரின் உறவினராக இருந்தார்கள். கூறுகின்றார்: நான் செயல்களத்திற்கு வந்தபோது துவக்கத்தில் கடினங்களை எதிர்கொள்ள நேரிட்டது. மிகவும் நேசத்துடன் மர்ஹூம் என்னுடைய விஷயங்களை கேட்பார்கள். மேலும் எனக்கு புரிய வைத்தார்கள். மிகவும் நுட்பமான ஞானம் நிறைந்த அறிவுரைகளை எனக்கு வழங்கினார்கள். இவ்வாறு எனது பிரச்சனைகளும், கடினங்களும் தானாகவே தீர்ந்து விட்டன. ஏராளமான விவகாரங்களில் நான் அன்னாரிடம் அறிவுரை பெற்று வந்தேன்.

MTA டைரக்டர் முனீர் ஷம்ஸ் ஸாஹிப் கூறுகின்றார்கள்: டெலிபோர்ட்டுடைய செட் அப்பை அன்னார் மிகவும் அழகிய முறையில் செய்திருந்தார்கள். சவ்த்ரி முனீர் ஸாஹிப் அவர்களுடைய மற்ற சிறப்புகளில் இந்த ஒரு சிறப்பும் இருந்தது. அதாவது, ஒவ்வொரு பணியிலும் மிகவும் ஆலோசனையுடன் ஜமாஅத்தின் பணத்தை சேமிப்பதற்கு முயற்சி செய்து வருவார்கள். மேலும், எந்த மிஷனரிகளுக்கு மிகவும் தேவை இருந்ததோ அதனை மட்டுமே பெற்று வந்தார்கள். அன்னாருடைய ஒவ்வொரு சொல்லிலும், செயலிலும் கிலாஃபத்துடனான எல்லையற்ற தூய்மை மற்றும், நன்றியுணர்வு மிக்க தொடர்பு வெளிப்பட்டு வந்தது. காலத்தின் கலீஃபாவுடைய ஒவ்வொரு சொல்லிற்கும் வார்த்தைக்கு வார்த்தை அப்படியே கட்டுப்பட வேண்டும் என்று செயல்பட்டு வந்தார்கள். MTA டெலிபோர்ட் டைரக்டராக அன்னார் இருந்தார்கள். ஆயினும் நான் இந்த பணியை செய்தேன்; மேலும் என் காரணமாக இந்த வெற்றி கிடைத்துக் கொண்டிருக்கின்றது என்ற எந்த ஒரு பகட்டும், வெளிப்படுத்துதலும் அன்னாரிடம் இருந்ததில்லை. மிகவும் பணிவுடன் பணி செய்யக் கூடியவராக இருந்தார்கள். இன்னும் கூறப்போனால், மற்றவர்களுக்கு கிரிடிட் கொடுத்து வந்தார்கள்.

நான் பார்த்துள்ளேன். மிகவும் நன்றியுணர்வுடன் அன்னார் தமது வக்ஃபை நிறைவேற்றினார்கள். மேலும் சுயநலமின்றி அன்னார் MTA வை அமெரிக்க கண்டத்தில் கொண்டு சேர்ப்பதற்கு முழு முயற்சி செய்தார்கள். எதனை நம்பிக்கைக்குரியதாக கருதினார்களோ அது குறித்து மிகவும் நல்ல ஆலோசனை வழங்குவார்கள். எனக்கும் எழுதி வந்தார்கள். முன்னால் வந்து தனது முக்கியத்துவத்தை கூறுவதற்கான ஆர்வம் அன்னாரிடம் இருந்ததில்லை. காலத்தின் கலீஃபாவின் புறமிருந்து தன்னிடம் என்ன பணி ஒப்படைக்கப்பட்டுள்ளதோ அதனை நான் அழகிய முறையில் நிறைவேற்ற முயற்சி செய்ய வேண்டும் என்ற ஓர் ஆர்வம் அன்னாரிடம் இருந்தது. அல்லாஹ் அன்னாருடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக! அந்தஸ்துகளை உயர்த்துவானாக!

இரண்டாவது நற்குறிப்பு அலநல்லூர் கேரளாவைச் சேர்ந்த மதிப்பிற்குரிய அப்துர் ரஹ்மான் குட்டி (குட்டி) ஸாஹிப் அவர்களுடையதாகும். அன்னார் கடந்த நாட்களில் மரணமடைந்துவிட்டார்கள்.

إِنَّا لِلَّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

அல்லாஹ்வின் அருளினால் வஸிய்யத் செய்தவராக இருந்தார்கள். பதினாறு வயதில் தமது மாமா மவ்லானா முஹம்மத் அலவி ஸாஹிப் மூலமாக பைஅத் செய்வதற்கு நற்பேறு பெற்றார்கள். தொழுகையையும், நோன்பையும் பேணக் கூடியவராக இருந்தார்கள். ஜமாஅத்துடன் மிகவும் தூய்மை மிக்க தொடர்பு கொண்டவராகவும், எளிய இயல்பு படைத்தவராகவும், பணிவு மிக்க மற்றும் நல்ல மனிதராகவும் இருந்தார்கள். ஒவ்வொரு பணியிலும் ஏதாவது ஒரு மார்க்க அம்சத்தை நிச்சயம் இணைப்பதற்கு அன்னார் முயற்சி செய்து வந்தார்கள். அன்னாரின் மகன் எழுதுகின்றார்கள்: அன்னார் எங்களது தர்பிய்யத்தில் மார்க்க அம்சத்திற்கு முன்னுரிமை வழங்கினார்கள். ஆக, காலையில் பள்ளிக் கூடத்திற்கு செல்வதற்கு முன்னதாக ஒரு மணிநேரம் மார்க்க மதரஸாவிற்கு அனுப்பி வைப்பார்கள். மேலும் இரவில் தூங்குவதற்கு முன்னர் எங்களை திருக்குர்ஆனை தொடர்ந்து முறையாக செய்ய ஓத வைத்து வந்தார்கள்.

அன்னாரின் மனைவி மூன்று வருடங்களுக்கு முன்னர் மரணமடைந்து விட்டார்கள். பின்விட்டுச் சென்றவர்களில் இரண்டு மகள்களும், நான்கு மகன்களும் அடங்குவர். ஒரு மகன் ஷம்ஸுத்தீன் ஸாஹிப் மலபாரி, காபாபீர் முபல்லிஃக் இன்சார்ஜ் ஆக தொண்டாற்றி வருகின்றார்கள். அன்னாரால் ஜனாஸா தொழுகையில் பங்குபெற முடியவில்லை. அல்லாஹ் அன்னாருக்கும் பொறுமை மற்றும் தைரியத்தை வழங்குவானாக. மர்ஹூமின் அந்தஸ்துகளை உயர்த்துவானாக. பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக.

(அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல் தினசரி நாளிதழ், ஜூன் 21, 2024, பக்கம் 2 - 6)

தமிழாக்கம்

மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * *

திருக்குர்ஆனிலிருந்து...

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

**(மல்ஃபூஸாத்)1-ம் பக்கத் தொடர்ச்சி..**

வைத்துள்ளனர். மேலும், அது திருக்குர்ஆனின் வழிகாட்டலாகவும் இருப்பதில்லை. மேலும் நபித்துவமும் ஒருபோதும் அதுபோன்ற வழிமுறைகளை விரும்பியதுமில்லை. சுருக்கமாக, மனிதன் தன்னுள் ஒரு தூய மாற்றத்தை ஏற்படுத்தாத வரை மேலும் உள்ளத்தை தூய்மைப்படுத்தாத வரை திருக்குர்ஆனின் ஞானங்கள் மற்றும் சிறப்புகள் குறித்து அறிவு அவனுக்கு கிடைக்க முடியாது. திருக்குர்ஆனில் எப்படிப்பட்ட ஞானங்களும் கருத்துகளும் இருக்கின்றன என்றால் அவை ஆன்மாவின் தாகத்தை தணிக்கக் கூடியவை ஆகும்.

ஆன்மாவிற்கு இன்பம் எதில் உள்ளது? என்பதை உலகம் அறிய விரும்பினால் பின்னர் அது திருக்குர்ஆனில் மட்டுமே உள்ளது என்பதை அறிந்து கொள்ளும்.

(மல்ஃபூஸாத், தொகுதி 1, பக்கம் 385, காதியான் பதிப்பு 2018-ம் ஆண்டு)

* * * * *

**(தஃப்ஸீரே கபீர்)1-ம் பக்கத் தொடர்ச்சி..**

அழகிய நடைமுறை இருந்து வரும். மக்கள் உடன்படிக்கைகளை பேணவில்லையென்றால் பின்னர் முதலில் நம்பிக்கையின்மையும் பின்னர் தப்பெண்ணமும் தோன்றிவிடும். மேலும் ஒரு நபருடைய தீய செயலின் விளைவில் மற்ற நூற்றுக்கணக்கான நபர்கள் சமுதாய அமைப்பின் பயன்களிலிருந்து இழுப்பிற்குரியவர்களாக ஆகிவிடுகின்றனர். எனவே மனிதன் தனது வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு என்ன ஆனாலும் முயற்சி செய்ய வேண்டும்.அப்போதுதான் நம்பிக்கை நிலைபெறும்; மேலும் மக்கள் சுய விருப்பத்துடன் ஒருவர் மற்றவருக்கு உதவி செய்வதற்கு தயாராக இருப்பார்கள். மேலும் சமுதாயம் முன்னேற்றம் அடைய முடியும்.

தனிப்பட்ட உடன்படிக்கையைத் தவிர சமுதாய உடன்படிக்கை என்ற ஒன்றும் இருக்கின்றது. அதாவது பல நபர்கள் ஒருவரின் கரத்தில் சமுதாய முன்னேற்றத்திற்காக உடன்படிக்கை செய்கின்றனர். அதன் பெயர் கிலாஃபத் ஆகும். அந்த உடன்படிக்கையும் இதனுள் அடங்கும். மேலும் இந்த வசனத்தில் அதன் பக்கமும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. கூறுகின்றான்: இறைவன் உங்களுக்கு ஒரு ஜமாஅத்தை உருவாக்கியுள்ளான். மேலும் ஓர் அமைப்பை நிறுவியுள்ளான். மேலும் நீங்கள் அந்த அமைப்பை பேணி நடப்பதாக சத்தியம் செய்துள்ளீர்கள். தற்போது நீங்கள் அதனை பேணி நடந்து வரவேண்டும். இல்லையென்றால் உங்களது தியாகங்களால் நிலைபெற்றிருக்கின்ற இஸ்லாத்தின் திகில் மறைந்து கொண்டிருக்கும். மேலும் பின்னர் மீண்டும் முதலில் இருந்து முயற்சி செய்ய நேரிடும். ஒரு மாபெரும் அரசியல் கருத்து கூறப்பட்டுள்ளது. சில நபர்களின் பிரிவினையினால் முழு அமைப்பும் அழிந்து விடும். மேலும் சமுதாயத்தின் உழைப்பு வீண்போய்விடும். மேலும் புதிய வடிவில் மீண்டும் உழைப்பு மற்றும் தியாகத்திற்கான தேவை ஏற்பட்டு விடுகின்றது. ஆயினும், உடைந்த பொருள் ஒன்று புதிய ஒன்றைப் போல சேர்த்து விட முடியாது. உடைந்த உள்ளங்கள் முன்னர் எப்போதும் இணைந்து இருந்ததைப் போன்று சேர முடியாது. எனவே அந்த உடன்படிக்கையை நிலைநாட்டுவதற்காக மிகவும் கடுமையான முயற்சி செய்வது அவசியம் ஆகும்.

இந்த வசனத்தின் சொற்களிலிருந்து இந்த விஷயமும் தெரிய வருகின்றது: அதாவது, இதில் அந்நிய சமுதாயங்களுடனான உடன்படிக்கையை பேணுவதற்கான அறிவுரை இருக்கின்றது. இந்த கருத்தின் அடிப்படையில் இந்த வசனத்தை ஒரு நிரந்தரமான கருத்தாக குறிப்பிட வேண்டியுள்ளது. அதாவது

وَلَا تَكُوْنُوْا

என்பதிலிருந்து புதிய கருத்தாக புரிந்து கொள்ளப்படும்.மேலும், இதன் பொருள் இவ்வாறாக இருக்கும். அதாவது, எவ்வாறு அல்லாஹ்வுடன் செய்து கொண்ட உடன்படிக்கை மற்றும் தமது உள்ளார்ந்த உடன்படிக்கைகள் ஆகியவற்றை பேணுவது அவசியமோ அதேபோன்று மற்ற சமுதாயங்களுடன் செய்யப்பட்ட உடன்படிக்கைகளை பேணுவதும் அவசியமாகும்.அந்த உடன்படிக்கைகளை கண்காணித்து வரவேண்டும். இல்லையென்றால் உலகின் அமைதி சீர்குலைந்து விடும். எனவே دَخَلًا

என்ற சொல்லும் இந்த விஷயத்தையே வெளிப்படுத்துகின்றது. மேலும்

كَالَّتِىْ نَقَضَتْ غَزْلَهَا مِنْ بَعْدِ قُوَّةٍ

.. என்பதன் பொருளும் இதுவே ஆகும். அதாவது அமைதி நிலைநாட்டப்பட்ட பிறகு குழப்பத்திற்கான சூழலை உருவாக்காதீர்கள். (தஃப்ஸீரே கபீர், தொகுதி 4, பக்கம் 229, காதியான் பதிப்பு 2010)

* * * * *

**12- ம் பக்கத் தொடர்ச்சி (குத்பா பேருரை 07-6-24) ........ ....**

பிஃரே மவூனா உடைய ஷஹீதுகளைக் குறித்து எழுதப்பட்டுள்ளதாவது: மகாசி வாசிகளுடைய ஒருமித்த கருத்து என்னவென்றால், இந்தப் போரில் ஹஸ்ரத் அம்ர் பின் உமைய்யா ஸம்ரீ மற்றும் கஅப் பின் ஸைத் ஆகியோரைத் தவிர மற்ற அனைத்து ஸஹாபிகளும் ஷஹீதாக்கப்பட்டார்கள் என்பதாகும். ஹஸ்ரத் கஅப் பின் ஸைத் (ரலி) அவர்கள் பிஃரே மவூனா நாளில் காயமடைந்து போனார்கள். அவர்கள் அகழ் போரில் மரணமடைந்தார்கள். ஹஸ்ரத் அம்ர் பின் உமைய்யா (ரலி) அவர்கள் முஆவியா அவர்களின் காலத்தில் மரணமடைந்தார்கள்.இந்தப் போரில் கலந்து கொண்ட அனைத்து ஸஹாபா பெருமக்களின் பெயர்கள் வரலாற்று நூல்களிலும், வாழ்க்கை வரலாற்று நூல்களிலும் இடம்பெறவில்லைதான். எனினும் ஷஹீதானவர்களில் 29 ஸஹாபா பெருமக்களுடைய பெயர்கள் இடம் பெற்றுள்ளன. அச்சடிக்கப்படும் போது அப்பெயர்கள் கூறப்படும். இப்போது அவர்களுடைய பெயரை நான் எடுத்துக் கூறவில்லை. 29 பெயர்கள் உள்ளன. நீண்ட பட்டியல் ஆகும்.

எவ்வாறு இருப்பினும். உயிர் தப்பிய ஸஹாபிகளை குறித்து இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

இந்தப் போரில் கலந்து கொண்ட ஸஹாபிகளில் இருவர் அதாவது ஹஸ்ரத் அம்ர் பின் உமைய்யா ஸம்ரீ மற்றும் ஹஸ்ரத் முன்ஸிர் பின் முஹம்மது ஆகியோர் ( உயிர் தப்பினார்கள்). சில வரலாற்றாசிரியர்களை பொறுத்த வரை முன்ஸிர் அவர்களுக்கு பதிலாக ஹாரிஸ் பின் சிம்மஹ் இருந்தார்கள் என்று கூறப்பட்டுள்ளது. இவர்கள் இருவரும் அந்நேரத்தில் ஒட்டகங்கள் போன்ற கால்நடைகளை மேய்ப்பதற்காக தம் குழுவை விட்டு தனியாக இங்குமங்கும் சென்றிருந்தார்கள். அவர்கள் தூரத்திலிருந்து முகாமை பார்த்தபோது அங்கு பறவை கூட்டம் சுற்றுவதை கண்டார்கள். பாலைவனத்து தடயங்களை நன்கு அறியக் கூடியவர்களாக அவர்கள் இருந்தார்கள். போர் நடைபெற்றுள்ளது என்பதை உடனே அவர்கள் புரிந்து கொண்டார்கள். அவர்கள் திரும்பி வந்தபோது, அநீதியாளர்களான காஃபிர்களின் இரத்த வெறி பிடித்த நடவடிக்கையை கண்முன் கண்டார்கள். தூரத்திலிருந்து இக்காட்சியை கண்ட பிறகு இப்பொழுது நாம் என்ன செய்ய வேண்டும்? என்று உடனடியாக தமக்குள் ஆலோசனை செய்ய ஆரம்பித்தார்கள். நாம் இங்கிருந்து உடனடியாக ஓடி சென்று விட வேண்டும்; மதீனா சென்றடைந்து பெருமானார் (ஸல்) அவர்களுக்கு தகவல் கொடுக்க வேண்டும் என்று ஒருவர் கூறினார். ஆனால், மற்றவரோ இந்த ஆலோசனைக்கு ஒப்புக் கொள்ளவில்லை. நம்முடைய அமீர் முன்ஸிர் பின் அம்ர் அவர்கள் எங்கு ஷஹீதானார்களோ அந்த இடத்தை விட்டு நான் ஓடிச் செல்ல மாட்டேன் என்று கூறினார். ஆகவே அவர் முன்னேறிச் சென்று சண்டையிட்டு ஷஹீதாகிக் போனார்.

இது ஸீரத் காத்தமுன்னபிய்யீன் என்ற நூலுடைய மேற்கோள் ஆகும்.

ஹஸ்ரத் அம்ர் பின் உமைய்யா ஸம்ரீ (ரலி) அவர்களை தவிர மற்றொரு நபரும் உயிர் தப்பினார். அவர் கால் ஊனமுற்றவராக இருந்தார். அந்த ஸஹாபியின் பெயர் கஅப் பின் ஸைத் ஆக இருந்தது. சில அறிவிப்புகளில் இருந்து, காஃபிர்கள் அவர்கள் மீதும் தாக்குதல் நடத்தினார்கள் என்று தெரிய வருகின்றது. இவர்கள் ஹஸ்ரத் ஹராம் பின் மில்ஹான் (ரலி) அவர்களுடன் இருந்தார்கள். அதன் காரணமாக இவர்கள் கடுமையாக காயமுற்றிருந்தார்கள். இவரை இறந்தவர் எனக் கருதி காஃபிர்கள் இவரை விட்டு விட்டார்கள். கடுமையாக காயம் அடைந்திருந்த போதிலும் இவரிடம் உயிர் எஞ்சி இருந்தது. ஷஹீதுகளின் சடலங்களுக்கிடையிலிருந்து இவர் எடுக்கப்பட்டார். அதன் பிறகு அவர் உயிர் வாழ்ந்தார். இறுதியில் அகழ் போரில் இவர்களுக்கு ஷஹீதாவதற்கான நல்வாய்ப்பு கிடைத்தது.

ஹஸ்ரத் அம்ர் பின் உமைய்யா (ரலி) அவர்கள் கைது செய்யப்பட்டது தொடர்பாக இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

அம்ர் பின் உமைய்யா கைது செய்யப்பட்டார்கள். எதிரிகள் கேட்டபோது, தாம் பனூ முஸிர் கோத்திரத்தைச் சார்ந்தவன் என்று அன்னார் கூறினார்கள். அப்போது ஆமிர் பின் துஃபைல், அம்ர் (ரலி) அவர்களை பிடித்து அவர்களுடைய நெற்றி முடியை வெட்டி விட்டான். பிறகு தன் தாயார் சார்பாக அவர்களை விடுதலை செய்து விட்டான்.

(தொடர்ச்சி அடுத்த இதழில்....)

தமிழாக்கம்

* * * * *

நபிமொழியிலிருந்து...

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

# ஜுமுஆ பேருரை

**ஸரிய்யா பிஃரே மவூனா போரின் நிலைமைகள் மற்றும் சம்பவங்களைப் பற்றிய குறிப்புகள்**

**அநீதிகளுக்கு ஆளாகி வரும் பாலஸ்தீன மக்களுக்காகவும் பாகிஸ்தான் அஹ்மதிகளுக்காகவும் துஆ செய்வதற்கான அறிவுரை**

ஸஹாபிகள் இறைவனின் வழியில் கொல்லப்படுவதிலேயே தங்களுக்கு நிம்மதி இருப்பதாக உணர்ந்தார்கள். ஸஹாபிகளின் இப்படிப்பட்ட பெரும்பாலான சம்பவங்கள் நமக்கு வரலாற்றிலிருந்து கிடைக்கின்றன

ஸரிய்யா பிஃரே மவூனா போருக்குப் சென்றவர்களில் அனைவருமே இளைஞர்களாக இருந்தனர். அவர்கள் திருக்குர்ஆனை முறையாக ஓதக் கூடியவர்களாக இருந்ததன் காரணத்தினால் மக்கள் அவர்களை குர்ராஃ என்ற பட்டத்தால் நினைவு கூர்ந்து வந்தனர்

ஹஸ்ரத் ஹராம் பின் மில்ஹான் (ரலி) அவர்கள் கூறினார்கள்: பிஃரே மவூனா வாசிகளே! நான் உங்களிடத்தில் அல்லாஹ்வின் தூதரால் அனுப்பப்பட்ட தூதுவர் என்ற ரீதியில் வந்துள்ளேன்; அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவர் வேறு எவருமில்லை என்றும் முஹம்மத் (ஸல்) அவர்கள் அவனுடைய அடியார் மற்றும் தூதர் ஆவார்கள் என்றும் நான் சாட்சியம் அளிக்கின்றேன். நீங்கள் அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் மீது ஈமான் கொள்ளுங்கள்

இஸ்லாம் வாளின் அழுத்தத்தால் வெற்றி பெறவில்லை. மாறாக உள்ளங்களில் இறங்கிய அந்த உயர்தரமான போதனைகளின் மூலமாக வெற்றி பெற்றது. மேலும் ஒழுக்கங்களில் ஒரு உயர்தரமான மாற்றத்தை ஏற்படுத்தி விட்டது

(ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள்)

அம்ர் பின் துஃபைல் அந்தத் தாக்குதலுக்கு பிறகு உயிருடன் இருந்தான். அவனை இறைத் தூதர் (ஸல்) அவர்களின் சாபம் பற்றியது. மேலும் அவனுக்கு பிளேக் நோய் ஏற்பட்டது. அதன் காரணமாக அவன் குஃப்ரின் நிலையில் மாண்டு போனான்

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**

(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 07 ஜுன் 2024** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 140**3** ஆண்டு **இஹ்ஸான்** மாதம் **07ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

இன்று நான் எந்த போர் குறிப்பை பற்றி எடுத்துரைக்க இருக்கின்றேனோ அதனுடைய பெயர் ஹஸ்ரத் முன்ஸிர் பின் அம்ர் (ரலி) அவர்களின் போர் அல்லது பிஃரே மவூனா போர் என்று அழைக்கப்படுகின்றது. வேதனை மிகுந்த இந்த நிகழ்வும் ஹிஜ்ரீ 4-ம் ஆண்டில் நிகழ்ந்தது. சிலரைப் பொருத்த வரை இந்தப் போர் ரஜீஃ போருக்கு முன்பு நிகழ்ந்ததாகவும், சிலரைப் பொருத்த வரை ரஜீஃ போருக்கு பிறகு நிகழ்ந்ததாகவும் இருக்கின்றது. இந்த சம்பவமும் ரஜீஃ போரை போன்றே எதிரிகளின் மோசடி மற்றும் இரக்கமற்ற தன்மையின் மிக தீய முன்மாதிரியாக இருக்கிறது. இந்தப் போர் பிஃரே மவூனா போர் என்றழைக்கப்படுகின்றது. பிஃரே மவூனா என்பது மக்காவில் இருந்து மதீனாவுக்கு செல்லும் வழியில் பனூ ஸுலைம் பகுதியில் இருந்த ஒரு கிணறு ஆகும். அது இந்தப் பெயரைக் கொண்ட பகுதியாகவும் இருந்தது. இதன் காரணமாகவே இதனுடைய பெயர் பிஃரே மவூனா போர் என்று பிரபலமடைந்திருந்தது. இந்தப் போரின் அமீராக ஹஸ்ரத் முன்ஸிர் பின் அம்ர் (ரலி) அவர்கள் இருந்தார்கள். ஆகவே இது ஹஸ்ரத் முன்ஸிர் பின் அம்ர் (ரலி) அவர்களின் போர் என்றும் அழைக்கப்படுகின்றது. அதேபோன்று ஸரிய்யத்துல் குரா என்ற பெயராலும் அழைக்கப்படுகிறது. பிஃரே மவூனா போருக்காக புறப்பட்ட அனைத்து ஸஹாபிகளும் இளைஞர்களாக இருந்தார்கள். அவர்கள் திருக்குர்ஆனை (முறையாக) கிராஅத் செய்யக் கூடியவர்களாக இருந்ததன் காரணமாக மக்கள் அவர்களை குரா என்ற பட்டப் பெயராலும் நினைவு கூரப்பட்டு வந்தனர்.

இந்தப் போரின் பின்னணியைக் குறித்து ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்:

ஸுலைம் மற்றும் ஃகத்ஃபான் என்ற இந்த கோத்திரங்கள் அரேபியாவின் மத்தியப்பகுதியில் உயர்வான பகுதியான நஜதில் குடியிருந்தார்கள். மேலும் மக்கத்து குறைஷிகளுடன் சேர்ந்து கொண்டு முஸ்லிம்களுக்கு எதிராக சூழ்ச்சிகளை செய்யக் கூடியவர்களாக இருந்தார்கள். இந்த விஷமத்தனமான கோத்திரங்களின் விஷமங்கள் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்துக் கொண்டே சென்றன. மேலும் நஜதின் அனைத்து உயர்வான பகுதிகளிலும் இஸ்லாத்தின் பகைமையின் விஷம் வீசிக் கொண்டே சென்றது. எந்த காலத்தைக் குறித்து நாம் தற்போது குறிப்பிட்டு வருகிறோமோ அக்காலத்தில் அரேபியாவின் மத்தியப் பகுதியில் இருந்த பனூ ஆமிர் கோத்திரத்தின் தலைவனான அபூ பராஃ ஆமிரி என்பவர் பெருமானார் (ஸல்) அவர்களின் சமூகத்தில் அன்னாரை சந்திப்பதற்காக ஆஜரானார். பெருமானார் (ஸல்) அவர்கள் பெரும் மென்மையுடனும், பரிவுடனும் அவனுக்கு இஸ்லாத்தைப் பற்றி தப்லீஃக் செய்தார்கள். அவரும் வெளிப்படையில் ஆர்வத்துடனும், கவனத்துடனும் அன்னாருடைய சொற்பொழிவைக் கேட்டார். ஆனால், முஸ்லிமாக ஆகவில்லை. எனினும், பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் நஜத் வாசிகளுக்கு இஸ்லாத்தைப் பற்றி தப்லீஃக் செய்யும் வண்ணம் தாங்கள் என்னுடன் தங்களுடைய சில தோழர்களை நஜத்-ஐ நோக்கி அனுப்பி வையுங்கள்; நஜத் மக்கள் தங்களுடைய அழைப்பை மறுக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன் என்று கோரிக்கை வைத்தார். எனக்கு நஜத் மக்கள் மீது நம்பிக்கை இல்லை என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். தாங்கள் ஒருபோதும் கவலை கொள்ள வேண்டாம்; தாங்கள் அனுப்பி வைக்கும் மக்களின் பாதுகாப்புக்கு நான் உத்தரவாதம் அளிக்கின்றேன் என்று அபூ பராஃ கூறினார். அபூ பராஃ ஒரு கோத்திரத்தின் தலைவனாக இருந்தார். அத்துடன் செல்வாக்குள்ளவராகவும் இருந்தார். ஆகவே பாதுகாப்புக்கு அவர் உத்தரவாதம் வழங்கியபோது அன்னார் (ஸல்) அதை நம்பினார்கள். மேலும் ஸஹாபிகளின் ஒரு குழுவை நஜதை நோக்கி அனுப்பி வைத்தார்கள்.

இது ஒரு வரலாற்று நூலில் கூறப்பட்டுள்ள) அறிவிப்பாகும். புகாரியில் கூறப்பட்டுள்ளதென்னவென்றால், பிரபல்யமான கோத்திரமான பனூ ஸுலைமுடைய கிளைக் கோத்திரங்களாக இருந்த ரிஃல் மற்றும் ஸக்வான் ஆகியவற்றின் சில மக்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜரானார்கள். அவர்கள் இஸ்லாத்தை (ஏற்றுக் கொண்டதாக) வெளிப்படுத்திய பின்னர், எங்களுடைய சமுதாயத்தில் எவர்கள் இஸ்லாத்தின் எதிரிகளாக இருக்கிறார்களோ அவர்களுக்கெதிராக எங்களின் உதவிக்காக சில மக்களை தாங்கள் அனுப்பி வையுங்கள் என்று கோரிக்கை வைத்தனர்.

எம் மாதிரியான உதவி என்பது இங்கு விளக்கம் கொடுக்கப்படவில்லை. தப்லீஃக் உதவியா? அல்லது படை உதவியா? என்று கூறப்படவில்லை.

திருக்குர்ஆனிலிருந்து...

அவர்கள் இரவு நேரத்தில்
குறைவாகவே
துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

எவ்வாறு இருப்பினும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்தக் குழுவை அனுப்பி வைத்தார்கள்.

பிஃரே மவூனா உடைய விளக்கங்களில் புகாரி உடைய அறிவிப்புகளிலும் துரதிஷ்டவசமாக சில சம்பவங்கள் கலந்து விட்டன. அதன் காரணமாக முழுமையான முறையில் உண்மை தீர்மானிக்கப்பட இயலாமல் போய்விட்டது. ஆனால், எவ்வாறு இருப்பினும் அச்சந்தர்ப்பத்தில் ரிஃல் மற்றும் ஸக்வான் ஆகிய கோத்திரங்களைச் சேர்ந்த மக்களும் பெருமானார் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜராகி இருந்தார்கள். சில ஸஹாபிகளை தம்முடன் அனுப்பி வைக்குமாறு அவர்கள் விண்ணப்பம் வைத்தனர் என்ற அளவுக்கு உறுதியாக அறிய முடிகிறது. இந்த இரு அறிவிப்புகளின் ஒருங்கிணைந்த நிலையைப் பார்க்கும் போது, ரிஃல் மற்றும் ஸக்வான் கோத்திரங்களைச் சார்ந்த மக்களுடன் ஆமிர் கோத்திரத்தின் தலைவரான அபூ பராஃ ஆமிரியும் வந்திருந்தார். அவர் அவர்களின் சார்பாக பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் பேசினார். ஆகவே வரலாற்று அறிவிப்புகளின் அடிப்படையில் பார்க்கும்போது, எனக்கு நஜ்த் வாசிகள் மீது திருப்தி இல்லை என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறுவது, அதற்கு பதில் அளிக்கும் விதமாக தாங்கள் கவலைப்பட வேண்டாம்; தங்களுடைய ஸஹாபிகளுக்கு எந்தத் துன்பமும் வந்தடையாது என்று நான் அதற்கு உத்தரவாதம் வழங்குகின்றேன் என்று அவர் கூறுவது இது எதன் பக்கம் சுட்டிக் காட்டுகின்றது என்றால் அபூ பராஃவுடன் ரிஃல் மற்றும் ஸக்வானைச் சேர்ந்த மக்களும் வந்திருந்தார்கள்; அதன் காரணமாக பெருமானார் (ஸல்) அவர்களுக்கு கவலை இருந்தது என்று தெரிய வருகிறது. அல்லாஹ்வே நன்கறிவான்.

எவ்வாறு இருப்பினும், பெருமானார் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரீ 4-ம் ஆண்டு ஸஃபர் மாதத்தில் முன்ஸிர் பின் அம்ர் அன்ஸாரி அவர்களின் தலைமையில் ஸஹாபிகளின் ஒரு குழுவை அனுப்பி வைத்தார்கள். பொதுவாக இம்மக்கள் (அனைவரும்) அன்ஸாரிகளைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். எண்ணிக்கையோ 70-ஆக இருந்தது. ஏறக்குறைய அனைவரும் திருக்குர்ஆனை ஓதக் கூடிய காரியாக இருந்தார்கள்.

இதைக் குறித்து ஓர் எழுத்தாளர் இவ்வாறு எழுதுகிறார்: பெருமானார் (ஸல்) அவர்களுக்கு ஒவ்வொரு கணமும் ஒவ்வொரு நொடிப்பொழுதும் அல்லாஹ்வின் மார்க்கம் முழு உலகிலும் மேலோங்கி விட வேண்டும் என்பதும், எல்லா மக்களும் இஸ்லாத்தின் நிழலில் வந்து விட வேண்டும் என்பதும். அனைவரும் அல்லாஹ்வின் அடியார்களாக ஆகி விட வேண்டும் ; அதன் மூலமாக அவர்கள் உலகிலும், மறுமையிலும் வெற்றி பெற்று விட வேண்டும் என்பதும் அன்னாரின் விருப்பமாக இருந்து வந்தது. எனவே மார்க்கத்தின் பக்கம் அழைப்பு கொடுப்பதிலும், தப்லீஃக் உடைய கடமையை செய்வதிலும் அன்னார் அளவில்லாத அளவு முக்கியத்துவம் கொடுத்து வந்தார்கள். அதற்காக அனைத்து வழிவகைகளையும் செயல்படுத்துவதற்காகவும் பெரும் பெரும் தியாகங்களை செய்வதற்கும் தயங்கியது கிடையாது. இதன் காரணமாகத்தான் நஜ்த் மக்கள் தரப்பில் ஆபத்து இருந்த போதிலும் அல்லாஹ்வின் மீது நம்பிக்கையூட்டியதை நம்பி ஸஹாபிகளின் ஒரு பெரும் குழுவை அவர்களின் பக்கம் அனுப்பி வைத்தார்கள். தப்லீஃக் கடமையை முழுமை செய்வதற்காகவும் இஸ்லாத்தை பரப்புகின்ற தூய பணியை முன்னெடுத்து செல்வதற்காகவும் இவ்வளவு பெரிய நடவடிக்கையை அன்னார் (ஸல்) மேற்கொண்டார்கள்.

எவ்வாறு இருப்பினும், படைத் தளபதியான ஹஸ்ரத் முன்ஸிர் பின் அம்ர் (ரலி) அவர்கள் முத்தலிப் சல்மீ என்ற பனூ ஸுலைமுடைய ஒரு வழிகாட்டியுடன் புறப்பட்டார்கள். அவர்கள் பிஃரே மவூனாவை அடைந்து அங்கு முகாமிட்டார்கள். ஹஸ்ரத் அம்ர் பின் உமையா ஸம்ரீ (ரலி) அவர்களின் கண்காணிப்பின் கீழ் தம் சவாரி கால்நடைகளை மேய விட்டார்கள். அவர்களுடன் ஹாரிஸ் பின் ஸிம்மஹ் (ரலி) அவர்களும் இருந்தார்கள். இப்னு ஹிஷாம் அவர்கள் ஹாரிஸ் அவர்களுக்குப் பதிலாக முன்ஸிர் பின் முஹம்மத் (ரலி) அவர்களின் பெயரை எழுதியுள்ளார்கள். இந்தப் போர் தொடர்பாக பெருமானார் (ஸல்) அவர்களின் ஒரு கடிதத்தின் குறிப்பு காணக் கிடைக்கின்றது. அதை அன்னார்(ஸல்) ஆமிர் பின் துஃபைல் என்பவனின் பெயரில் எழுதியிருந்தார்கள்.

அதனுடைய விளக்கத்தில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: பெருமானார் (ஸல்) அவர்கள் ஸஹாபா பெருமக்களின் குழுவிடம் ஆமிர் பின் துஃபைல் உடைய பெயருக்கு ஒரு கடிதத்தையும் வழங்கினார்கள். இவன் அபூ பராஃ உடைய ஆணவம், கர்வம் மிக்க தலைவர்களுள் ஒருவனாகவும் இருந்தான். அந்த நிகழ்வு என்னவென்றால்,இந்த நபர் தன்னுடைய உள்ளத்தில் பெருமானார் (ஸல்) அவர்களின் அழைப்பின் உண்மைத்துவத்தை புரிந்து கொண்டவனாக இருந்தான். வெகு விரைவில் அன்னாருக்கு முழு அரேபிய தீபகற்பத்திலும் வெற்றியும், மேன்மையும் கிடைத்து விடும் என்பதை இவன் நன்கு அறிந்திருந்தான். ஆனால், இதனுடனே அவன் தன்னுடைய ஆட்சிக்கான கனவு கண்டு கொண்டிருந்தான். தாம் முதலிலேயே பெருமானார் (ஸல்) அவர்களிடம் சென்று ஏதேனும் பேரம் பேசி வரலாம் என்று இவனுடைய சிந்தனையில் ஷைத்தானிய எண்ணம் ஓடிக் கொண்டிருந்தது. ஆகவே இவன் அன்னாருடைய சமூகத்தில் ஆஜராகி கிராமங்களில் வசிக்கக் கூடியவர்களுக்கு தங்களுடைய அதிகாரமும் நகரங்களில் வசிக்கக் கூடியவர்களுக்கு எனது அதிகாரமும் இருக்க வேண்டும். இதற்கான அதிகாரத்தை நான் தங்களுக்கு தருகின்றேன் அல்லது தங்களுக்குப் பிறகு நான் தங்களது கலீஃபாவாக பிரதிநிதியாக ஆக வேண்டும் அல்லது ஃகத்ஃபானுடைய ஓராயிரம் சிகப்பு, மஞ்சள் நிற குதிரைகள் மற்றும் ஓராயிரம் ஒட்டக படையுடன் நான் தங்களுடன் போரிடுவேன் என்று கூறினான்.

அதாவது மூன்று நிபந்தனைகளை அவன் எடுத்து வைத்தான். ஆமிர் பின் துஃபைல் உடைய மூடத்தனமான கோரிக்கைகளை பெருமானார் (ஸல்) அவர்கள் மறுத்து விட்டார்கள். எந்த விஷயத்தையும் ஒப்புக் கொள்ளவில்லை. அவன் தோல்வி அடைந்து திரும்பினான்.

பெருமானார் (ஸல்) அவர்கள் பிஃரே மவூனா வாய்ப்பை மார்க்கத்தின் பக்கம் அழைப்பு கொடுப்பதற்கு பொருத்தமான சந்தர்ப்பமாகக் கருதினார்கள். ஆகவே அன்னார் குறிப்பாக அவனுடைய பெயரில் ஒரு கடிதத்தை எழுதி ஸஹாபிகளின் கையில் கொடுத்து அனுப்பி வைத்தார்கள். படைத் தளபதியான ஹஸ்ரத் முன்ஸிர் பின் அம்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஹராம் பின் மில்ஹான் (ரலி) அவர்களின் கையில் பெருமானார் (ஸல்) அவர்களின் கடிதத்தை கொடுத்து பனூ ஆமிர் கோத்திரத்தின் தலைவனான ஆமிர் பின் துஃபைலை-ஐ நோக்கி அனுப்பி வைத்தார்கள்.

ஹஸ்ரத் ஹராம் பின் மில்ஹான் (ரலி) அவர்கள் இக்கடிதத்தை கொண்டு சென்ற விபரம் குறித்து இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: ஹஸ்ரத் ஹராம் பின் மில்ஹான் (ரலி) அவர்கள் தம்முடன் இரு தோழர்களை அழைத்துச் சென்றார்கள். அவர்களில் ஒரு ஸஹாபி ஒரு கால் ஊனமுற்றவராக இருந்தார்கள். அவருடைய பெயர் கஅப் பின் ஸைத் ஆக இருந்தது. மற்றொரு தோழருடைய பெயரைக் குறித்து அநேக வரலாற்றாசிரியர்கள் மௌனம் காத்துள்ளார்கள். ஆயினும் புகாரியுடைய ஒரு விளக்கவுரையான ஃபத்ஹுல் பாரியில் ரஜீஃ போர் குறித்த தலைப்பின் கீழ் இச்சம்பவத்தின் விளக்கம் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் மற்றொரு தோழருடைய பெயர் முன்ஸிர் பின் முஹம்மத் என்று கூறப்பட்டுள்ளது.

எவ்வாறு இருப்பினும் இந்த மூவரும் புறப்பட்டார்கள். ஹஸ்ரத் ஹராம் (ரலி) அவர்கள் தமது இரு தோழர்களிடம் நீங்கள் எனக்கு அருகாமையிலேயே இருக்க வேண்டும்; நான் அவர்களிடத்தில் செல்வேன்; அவர்கள் எனக்கு அடைக்கலம் கொடுத்து விட்டால் நல்லது; ஒருவேளை அவர்கள் என்னை கொலை செய்துவிட்டால் நீங்கள் இருவரும் தமது தோழர்களிடத்தில் திரும்பி சென்று விட வேண்டும் என்று முன்பே கூறி வைத்திருந்தார்கள். அதற்குப் பிறகு அவர்கள் எவ்வித தயக்கமும் இன்றி அல்லாஹ்வின் எதிரியான ஆமிர் பின் துஃபைல் யிடம் சென்றார்கள். அவன் பனூ ஆமிர் உடைய சில மக்களுடன் அமர்ந்திருந்தான். ஹராம் (ரலி) அவர்கள் அந்த அனைவரையும் பார்த்து நான் அல்லாஹ்வின் தூதருடைய கடிதத்தை கொண்டு சேர்க்க வந்துள்ளேன். நீங்கள் எனக்கு இதற்காக அடைக்கலம் தருகின்றீர்களா? என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள் ஆம்! நாங்கள் அடைக்கலம் அளிக்கின்றோம் என்று பதில் கூறினர். ஹராம் (ரலி) அவர்கள் அவர்களுடன் கலந்துரையாட ஆரம்பித்தார்கள்.ஹராம் (ரலி) அவர்கள் அவர்களுக்கு முன்னால் பெருமானார் (ஸல்) அவர்களின் கடிதத்தை வாசிக்க ஆரம்பித்தார்கள் என்று மூஸா பின் உக்பா (ரலி) அவர்களின் அறிவிப்பில் வருகிறது. தப்ரீ வரலாற்று நூலில், ஹராம் (ரலி) அவர்கள் அந்த மக்களை பார்த்து பிஃரே மவூனாவைச் சார்ந்தவர்களே, நான் உங்களிடத்தில் அல்லாஹ்வின் தூதருடைய பிரதிநிதியாக வந்துள்ளேன். அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாரும் இல்லை என்றும், முஹம்மத் (ஸல்) அவர்கள் அவனுடைய அடியாரும், தூதரும் ஆவார்கள் என்றும் நான் சாட்சி கூறுகிறேன். நீங்கள் அல்லாஹ்வின் மீதும் அவனுடைய

தூதர் (ஸல்) அவர்கள் மீதும் நம்பிக்கைக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள். ஹராம் (ரலி) அவர்களின் இந்த அருளுக்குரிய கலந்துரையாடல் தொடர்ந்து கொண்டிருக்கும் போதே அங்கு இருந்த மக்கள் தம் தீய அகத்தை வெளிப்படுத்தினர். அவர்கள் தம் நபர் ஒருவரிடம் ஹராமுக்கு பின்னால் செல்லுமாறு சைகை செய்தார்கள். அந்த நபர் உடனடியாக ஹராம் (ரலி) அவர்களுக்கு பின்னால் சென்றடைந்தான். ஈட்டியைக் கொண்டு அன்னார் (ரலி) மீது தாக்கினான். அது அவர்களுடைய உடலை துளைத்து சென்று விட்டது. ஓர் அறிவிப்பில் வருகிறது:

ஹராம் (ரலி) அவர்கள் கடிதத்தை ஆமிர் பின் துஃபைல் -யிடம் கொண்டு சென்றார்கள். அப்பொழுது அந்த அநீதியாளன் அந்த கடிதத்தை பார்க்கக் கூட விரும்பவில்லை. அவர்கள் மீது தாக்குதல் நடத்தி அவர்களை ஷஹீதாக்கி விட்டான். எவ்வாறு இருப்பினும், ஹஸ்ரத் ஹராம் (ரலி) அவர்கள் வருவதற்கு தாமதமான போது முஸ்லிம்கள் அவரை பின் தொடர்ந்து சென்றனர். கொஞ்ச தூரம் சென்ற பிறகு, அவர்கள் மீது தாக்குதல் நடத்த வந்து கொண்டிருந்த படையை அவர்களுக்கு எதிர் கொள்ள நேர்ந்தது. அவர்கள் முஸ்லிம்களை சுற்றி வளைத்துக் கொண்டனர். எதிரிகள் எண்ணிக்கையில் அதிகமாக இருந்தனர். போர் நடைபெற்றது. பெருமானார் (ஸல்) அவர்களின் ஸஹாபிகள் ஷஹீதாக்கப்பட்டனர்.

இந்தப் போரில் ஹஸ்ரத் ஆமிர் பின் ஃபுஹைரா (ரலி) அவர்களின் ஷஹாதத் சம்பவத்தின் குறிப்பு இவ்வாறு காணப்படுகின்றது. இவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களால் விடுதலை செய்யப்பட்ட அடிமையாக இருந்தார்கள். அத்துடன் பெருமானார் (ஸல்) மற்றும் அபூபக்ர் (ரலி) ஆகியோருடன் ஹிஜ்ரத் செய்து மதீனாவுக்கு செல்லக் கூடிய நற்பேறும் பெற்றிருந்தார்கள். பிஃரே மவூனா சம்பவத்தின் போது மற்றவர்களும் ஷஹீதானபோது இவர்களும் ஷஹீதானார்கள். ஹஸ்ரத் அம்ர் பின் உமைய்யா ஸம்ரீ (ரலி) அவர்கள் கைது செய்யப்பட்டபோது ஆமிர் பின் துஃபைல், அவர்களிடத்தில் இவர் யார்? என்று கேட்டான். (அதாவது) கொல்லப்பட்ட ஒருவரை சுட்டிக் காட்டி அவர் கேட்டபோது, இவர்கள் ஆமிர் பின் ஃபுஹைரா (ரலி) என்று அம்ர் பின் உமைய்யா (ரலி) அவர்கள் பதில் கூறினார்கள். ஆமிர் பின் ஃபுஹைரா (ரலி) அவர்கள் கொல்லப்பட்ட போது அவர்கள் வானத்தின் பக்கம் உயர்த்தப்பட்டதை நான் கண்டேன் என்று ஆமிர் பின் துஃபைல் கூறினான். இவன் அப்பொழுது முஸ்லிமாக ஆகி இருக்கவில்லை.

அப்பொழுது இந்த காட்சியை அவன் கண்டான். எந்த அளவுக்கு என்றால், இப்பொழுதும் நான் அதை பார்க்கிறேன். வானம் அவருக்கும் பூமிக்கும் இடையில் இருக்கிறது. பிறகு அவர் பூமியில் இறக்கட்டார் என்று அவன் கூறினான். பெருமனார் (ஸல்) அவர்களுக்கு இந்த செய்தி வந்தடைந்த போது, அவர்கள் கொல்லப்பட்ட செய்தியை ஸஹாபிகளுக்கு கூறினார்கள். உங்களுடைய தோழர் கொல்லப்பட்டு விட்டார்; அவர் தமது இறைவனிடம் என் இறைவா! எங்களைக் குறித்த விஷயத்தை எங்களது சகோதரர்களிடம் கூறிவிடுவாயாக! நாங்கள் உன் மீது திருப்தி கொண்டுள்ளோம்; நீ எங்கள் மீது திருப்தி கொண்டு விட்டாய் என்று துஆ செய்தார்கள். ஆகவே அவர்களை குறித்து அல்லாஹ் செய்தியை தெரிவித்து விட்டான் என்று கூறினார்கள்.

இது ஸஹீஹ் புகாரியுடைய அறிவிப்பாகும். ஹஸ்ரத் ஆமிர் பின் ஃபுஹைரா (ரலி) அவர்களை யார் ஷஹீதாக்கினார்கள்? என்பதைக் குறித்தும் கருத்து வேறுபாடு காணப்படுகின்றது. சில அறிவிப்புகளில் அவர்களை ஆமிர் பின் துஃபைல் ஷஹீதாக்கியதாகவும், வேறு சில அறிவிப்புகளில் அவர்களை ஜப்பார் பின் ஸல்மா என்பவன் ஷஹீதாக்கியதாகவும் கூறப்பட்டுள்ளது. ஹஸ்ரத் ஆமிர் பின் ஃபுஹைரா (ரலி) அவர்களின் ஷஹாதத் சம்பவத்தை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்:

இஸ்லாம் வாளுடைய அழுத்தத்தால் வெற்றி பெறவில்லை ; மாறாக உள்ளங்களில் இறங்கி ஒழுக்கங்களில் ஓர் உயரிய மாற்றத்தை உருவாக்கிய மேலான போதனையின் மூலமாக வெற்றி பெற்றது. ஒரு ஸஹாபி தான் முஸ்லிமானதற்கான காரணமாக கூறும்போது, நான் ஒரு சமுதாயத்தினரிடம் விருந்தினராக இருந்தேன். அந்த சமுதாயம் மோசடி செய்து முஸ்லிம்களுடைய 70 காரிகளை ஷஹீதாக்கிவிட்டது. அவர்கள் முஸ்லிம்கள் மீது தாக்குதல் நடத்தியபோது சிலர் குன்றுகளின் மேலே ஏறிவிட்டார்கள்; சிலர் அவர்களை எதிர்க்க நின்று விட்டனர். எதிரியோ பெரும் எண்ணிக்கையில் இருந்தான். முஸ்லிம்கள் குறைவான எண்ணிக்கையில் இருந்தனர். அவர்களும் கூட ஆயுதமும் போர் தளவாடங்களும் இல்லாதவர்களாக இருந்தனர். ஆகவே ஒவ்வொருவராக அனைத்து முஸ்லிம்களையும் அவர்கள் ஷஹீதாக்கி விட்டார்கள். இறுதியில் ஒரே ஒரு ஸஹாபி மட்டுமே எஞ்சி இருந்தார். அவர் பெருமானார் (ஸல்) அவர்களுடன் ஹிஜ்ரத்தில் இணைந்திருந்த நபராக இருந்தார். மேலும், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களால் விடுதலை செய்யப்பட்ட அடிமையாக இருந்தார். அவருடைய பெயர் ஆமிர் பின் ஃபுஹைரா (ரலி) ஆகும். பல மக்கள் சேர்ந்து அவரை பிடித்தனர். ஒருவன் அவருடைய நெஞ்சின் மீது வேகமாக ஈட்டியை எறிந்தான். ஈட்டி குத்தியதுமே அவருடைய நாவிலிருந்து தன்னையுமறியாமல் ஃபுஸ்து வ ரப்பில் கஅபா என்ற சொற்கள் வெளிவந்தன. பொருள்:

கஅபாவுடைய இறைவன் மீது ஆணையாக! நான் வெற்றி பெற்று விட்டேன்.

அறிவிப்பாளர் அப்போது முஸ்லிமாக இருக்கவில்லை. அவர் இந்த சொற்களைக் கேட்டபோது வியப்பிற்கு ஆளானார். அவர் கூறுகிறார்: இந்த மனிதர் தமது உறவினர்களை விட்டு தூரத்தில் இருக்கிறார். தம் மனைவி மக்களை விட்டு தூரத்தில் இருக்கிறார்; இவ்வளவு பெரிய துன்பத்தில் சிக்கி இருக்கிறார்; அவருடைய நெஞ்சில் ஈட்டி குத்தப்பட்டுள்ளது; ஆனால் இவ்வளவு இருந்தும் மரணிக்கும்போது அவர் ஏதாவது கூறினார் என்றால் அது, கஅபாவுடைய இறைவன் மீது ஆணையாக! நான் வெற்றி பெற்று விட்டேன் என்பது மட்டுமே ஆகும். இந்த மனிதர் பைத்தியக்காரரா என்ன என்று நினைத்தேன். நான் சில மக்களிடம், இது என்ன விஷயம்? அவருடைய நாவிலிருந்து இவ்வாறான சொற்கள் ஏன் வெளிப்பட்டன? என்று கேட்டபோது, உங்களுக்கு தெரியாதா? இந்த முஸ்லிம்கள் நிச்சயமாக பைத்தியக்காரர்கள்தான். அவர்கள் இறை வழியில் மரணிக்கும்போது இறைவன் அவர்கள் மீது திருப்தி கொண்டு விட்டதாகவும் அவர்கள் வெற்றி பெற்று விட்டதாகவும் கருதுகிறார்கள் என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: என் இயல்பில் இதனுடைய தாக்கம் எந்த அளவு ஏற்பட்டது என்றால், நான் இம்மக்களுடைய தலைமையகத்திற்கு சென்று பார்க்க வேண்டும் என்றும், நானே இவர்களுடைய மார்க்கத்தை ஆராய வேண்டும் என்றும் தீர்மானித்து விட்டேன். ஆகவே நான் மதீனா சென்றடைந்தேன். (இஸ்லாமிய) போதனையை கேட்டறிந்து முஸ்லிமாக ஆகிவிட்டேன்.

ஒரு நபருடைய நெஞ்சில் ஈட்டி குத்தப்படுகின்றது. அவர் தம் ஊரை விட்டு பல மைல்கள் தூரத்தில் இருக்கின்றனர். அவருடைய அன்பரோ உறவினரோ அவருக்கு அருகில் இல்லை. அவருடைய நாவிலிருந்து ஃபுஸ்து வ ரப்பில் கஅபா என்ற சொற்கள் வெளிப்படுகின்றன. இது அவருடைய இயல்பில் எந்த அளவு தாக்கத்தை ஏற்படுத்தியது? என்றால் அவர் இந்த சம்பவத்தை கூறும் போதெல்லாம், ஃபுஸ்து வ ரப்பில் கஅபா என்ற சொற்களை அடையும் போது இந்த சம்பவத்தின் அதிர்ச்சியின் காரணமாக அவருடைய உடல் திடீரென நடுங்க ஆரம்பித்து விடும். கண்களில் இருந்து கண்ணீர் வடிய ஆரம்பித்து விடும்.

(ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள்) கூறுகின்றார்கள்: ஆகவே இஸ்லாம் தம் மேன்மைகளின் காரணமாக பரவியதேயன்றி பலவந்தத்தின் காரணமாக பரவவில்லை.

ஹஸ்ரத் ஆமிர் பின் ஃபுஹைரா (ரலி) அவர்களின் ஷஹாதத்தின் போது அவர்களின் நாவிலிருந்து ஃபுஸ்து வ ரப்பில் கஅபா என்ற சொற்களும், ஃபுஸ்து வல்லாஹி என்ற சொற்களும் வெளிப்பட்டன. இருவகையான சொற்களும் காணக் கிடைக்கின்றன. இருவகையான அறிவிப்புகளும் உள்ளன. இந்த சொற்கள் மற்ற ஸஹாபிகளின் நாவில் இருந்தும் வெளிப்பட்டு இருந்தன. ஆகவே இதைக் குறித்து ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் எடுத்துரைத்தவாறு கூறுகின்றார்கள்:

நாம் வரலாற்றைப் படித்துப் பார்க்கும் போது நமக்கு தெரிய வருவது என்னவென்றால், ஸஹாபிகள் போருக்கு எவ்வாறு செல்வார்கள் என்றால், போரில் ஷஹீதாகுவதே அவர்களுக்கு நிம்மதி, மகிழ்ச்சி ஆகியவற்றிற்கு காரணமாக இருப்பது போன்று தெரியும். போரில் அவர்களுக்கு ஏதேனும் துன்பம் ஏற்பட்டால் அதை அவர்கள் துன்பமாக நினைக்க மாட்டார்கள். மாறாக, மகிழ்ச்சியாக நினைத்து வந்தார்கள். ஆகவே வரலாற்றில் ஸஹாபிகளுடைய இது போன்ற சம்பவங்கள் அதிகமான அளவு காணப்படுகின்றன. அவர்கள் இறைவழியில்



Manufacturer and Retailer of Leather Fashion and Bags.
Specialized in the Desing and Production of Quality & Sale Online Platform
Like Flipkart, Amazon, Meesho. & Product Key Word is "Grizzly Wallet"
6294738647 mygrizzlyindia@gmail.com, www.mygrizzlyindia.com
my grizzly india
my grizzly india
my grizzly india

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 9 Thursday 04 - 11July 2024 Issue No.27 & 28

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

கொல்லப்படுவதையே தனது நிம்மதியாக உணர்ந்தார்கள். உதாரணமாக பெருமானார் (ஸல்) அவர்கள் மத்திய அரேபியாவின் ஒரு கோத்திரத்தை நோக்கி தப்லீஃக்கிற்காக திருக்குர்ஆனை மனனம் செய்தவர்களை அனுப்பி வைத்தார்கள். அவர்களில் ஹராம் பின் மில்ஹான் (ரலி) என்பவர் ஆமிர் கோத்திரத்தினுடைய தலைவனாக இருந்த ஆமிர் பின் துஃபைல் என்பவனிடத்தில் இஸ்லாத்தின் தூதுச் செய்தியை கொண்டு சென்றார்கள். மற்ற ஸஹாபிகள் பின்னால் இருந்தார்கள். ஆரம்பத்தில் ஆமிர் பின் துஃபைல் மற்றும் அவனுடைய தோழர்கள் நயவஞ்சகமான முறையில் இவர்களை வரவேற்றனர். அந்த ஸஹாபி நிம்மதி அடைந்து அமர்ந்து விட்ட போது, தப்லீஃக் செய்ய ஆரம்பித்த போது அவர்களில் சில விஷமிகள் ஒரு தீயவனுக்கு சைகை காட்டினார்கள். அவன் சைகை கிடைக்கப்பெற்றதுமே ஹராம் பின் மில்ஹான் (ரலி) அவர்களுக்கு பின்னால் சென்று ஈட்டியைக் கொண்டு தாக்கினான். அவர்கள் கீழே விழுந்து விட்டார்கள். கீழே விழும்போது அவர்களின் நாவிலிருந்து தன்னையுமறியாமல் அல்லாஹு அக்பர் ஃபுஸ்து வ ரப்பில் கஅபா என்ற சொற்கள் வெளிப்பட்டன. அதாவது கஅபாவின் இறைவன் மீது ஆணையாக! நான் இரட்சிப்பு பெற்று விட்டேன் என்று கூறினார். பிறகு அந்த விஷமிகள் மற்ற ஸஹாபிகளை சுற்றி வளைத்தனர். அவர்கள் மீது தாக்குதல் தொடுத்தனர். அந்த சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களால் விடுதலை செய்யப்பட்ட அடிமையான ஆமிர் பின் ஃபுஹைரா (ரலி) அவர்கள் இருந்தார்கள். இவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களுடன் ஹிஜ்ரத் பயணத்தில் இருந்திருந்தார்கள். இவர்களைப் பற்றி கூறப்படும் போது, எந்த அளவுக்கென்றால் இவரை கொலை செய்த கொலையாளியே இவரைப் பற்றி எடுத்துக் கூறுகிறார். அவர் பின்னாளில் முஸ்லிமாகி விட்டார். அவர் முஸ்லிமாக ஆனதற்கான காரணத்தை எடுத்துரைக்கும் போது கூறுகிறார்: நான் ஆமிர் பின் ஃபுஹைரா (ரலி) அவர்களை ஷஹீதாக்கினேன். அப்பொழுது அவர்களின் நாவில் இருந்து அவரையும் அறியாமல் ஃபுஸ்து வல்லாஹி என்ற சொற்கள் வெளிப்பட்டன. அதாவது இறைவன் மீது ஆணையாக! நான் எனது குறிக்கோளை அடைந்து விட்டேன்.

ஸஹாபிகளுக்கு மரணம் என்பது துக்கத்திற்கு காரணமாக அமையாமல் மகிழ்ச்சிக்கு காரணமாக அமைந்தது என்று இந்த சம்பவங்கள் கூறுகின்றன.

ஹஸ்ரத் ஆமிர் பின் ஃபுஹைரா (ரலி) அவர்களை ஷஹீதாக்கிய ஜப்பார் பின் ஸல்மா என்பவர் பிற்காலத்தில் முஸ்லிமாக ஆகிவிட்டார். அவர் கூறுகிறார்: என்னை இஸ்லாத்தின் பக்கம் ஈர்த்த விஷயம் என்னவென்றால், நான் பிஃரே மவூனா நாளின் போது ஆமிர் பின் ஃபுஹைரா (ரலி) அவர்களின் இரு தோளுக்கு இடையில் காத்திருந்து ஈட்டி எறிந்தேன். ஈட்டி முனை அவர்களுடைய நெஞ்சு வழியாக கிழித்துக் கொண்டு செல்வதை நான் கண்டேன். அப்போது அவர்கள் உடனடியாக,

ஃபுஸ்து வல்லாஹி என்று கூறுவதை நான் கேட்டேன். அதாவது அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் வெற்றி பெற்று விட்டேன். இச்சொற்கள் எனது செவி வழியாக எனது உள்ளத்தில் இறங்கி விட்டன. இந்த சொற்களின் பொருள் என்ன? இவர்களுக்கு என்ன விதமான வெற்றி கிடைத்தது? நானோ அவர்களை கொலை செய்துள்ளேன்! என்று நான் சிந்திக்க ஆரம்பித்து விட்டேன். நான் இதே குழப்பத்தில் ஸஹாக் பின் கஃப்யான் கலாபி என்ற ஒரு முஸ்லிமிடம் சென்று அவரிடம் முழு சம்பவத்தையும் கூறினேன். இந்த சொற்களுடைய பொருளை நான் கேட்டேன். அதற்கு, அவர் வெற்றியை அடைதல் என்பது சொர்க்கத்தை அடைவது ஆகும் என்று கூறினார். இதைக் கேட்டபோது, நிச்சயமாக அல்லாஹ்வின் மீது ஆணையாக! அவர் வெற்றி பெற்று விட்டார் என்று நான் கூறினேன். அத்துடன் அவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளுமாறு எனக்கு அழைப்பு கொடுத்த போது நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு விட்டேன்.

பிஃரே மவூனா என்ற இப்போரைக் குறித்து ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்:

இம்மக்கள் அந்த இடத்தை அடைந்தபோது, அது ஒரு கிணற்றின் காரணமாக பிஃரே மவூனா என்ற பெயரில் பிரபல்யமாக இருந்தது. அவர்களில் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்களின் மாமாவான ஹராம் பின் மில்ஹான் (ரலி) என்பவர் அபூ ஆமிரியின் சகோரனுடைய மகனாகவும், ஆமீர் கோத்திரத்தின் தலைவனாகவும் இருந்த ஆமிர் பின் துஃபைல் என்பவனிடம் பெருமானார் (ஸல்) அவர்களின் சார்பாக இஸ்லாத்தின் தூதுச் செய்தியை கொண்டு சென்றிருந்தார். மற்ற ஸஹாபிகள் பின்னால் இருந்தார்கள். ஹராம் பின் மில்ஹான் (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் தூதுச் செய்தியை கொண்டு செல்பவராக ஆமிர் பின் துஃபைல் மற்றும் அவனுடைய தோழர்களிடத்தில் சென்ற போது ஆரம்பத்தில் அவர்கள் நயவஞ்சகமான முறையில் வரவேற்பு கொடுத்தார்கள். அவர்கள் திருப்தி அடைந்து உட்கார்ந்து விட்ட போது, அதாவது ஹராம் பின் மில்ஹான் (ரலி) அவர்கள் இஸ்லாத்தின் தப்லீஃகை ஆரம்பித்தபோது அவர்களில் இருந்த விஷமிகளுள் சிலர் ஒருவனை நோக்கி சைகை செய்து இந்த அப்பாவி தூதுவரை பின்னால் இருந்து ஈட்டியால் தாக்கி அங்கேயே கொன்று போட்டார்கள். அந்நேரத்தில் ஹராம் பின் மில்ஹான் (ரலி) அவர்களுடைய நாவில் இருந்த சொற்கள் என்னவென்றால், அல்லாஹு அக்பர் ஃபுஸ்து வ ரப்பில் கஅபா என்பதாகும்.

அதாவது அல்லாஹ் மிகப் பெரியவன். கஅபாவின் இறைவன் மீது ஆணையாக. நான் என் குறிக்கோளை அடைந்து விட்டேன். ஆமிர் பின் துஃபைல் பெருமானார் (ஸல்) அவர்களின் தூதுவரை கொன்று விட்டதோடு நின்று விடாமல் அதற்குப் பிறகு தன் கோத்திரமான பனூ ஆமீர் மக்களிடம் எஞ்சியுள்ள முஸ்லிம் கூட்டத்தின் மீது தாக்குதல் நடத்துமாறு தூண்டி விட்டான். ஆனால், அவர்களோ, அபூ பராஃ (ரலி) அவர்களின் உத்தரவாதம் இருக்கும்போது நாங்கள் முஸ்லிம்கள் மீது தாக்குதல் தொடுக்க மாட்டோம் என்று மறுத்து விட்டார்கள்.ஆகவே ஆமிர் பின் துஃபைல், ஸலைம் கோத்திரம், பனூ ரஅல், ஸக்வான் மற்றும் உஸைய்யா போன்ற கோத்திரத்து மக்களை தன்னோடு இணைத்துக் கொண்டான். புகாரியின் அறிவிப்பின் அடிப்படையில் இம்மக்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் தூதுக் குழுவினராக வந்திருந்தார்கள. இவர்கள் அனைவரும் முஸ்லிம்களின் இந்த ஆதரவற்ற சிறு கூட்டத்தின் மீது தாக்குதல் நடத்தினார்கள். இந்த காட்டுமிராண்டிகள் தம் பக்கம் வருவதை முஸ்லிம்கள் கண்டபோது, அவர்களிடம், உங்களுடன் எங்களுக்கு எவ்வித சண்டையும் கிடையாது; நாங்களோ பெருமானார் (ஸல்) அவர்களின் சார்பாக ஒரு பணிக்காக வந்திருக்கின்றோம். உங்களிடம் சண்டையிட வரவில்லை என்று கூறினார்கள். ஆனால், அவர்களோ எதையும் கேட்கவில்லை. அனைவரையும் வாளால் வெட்டி வீழ்த்தி விட்டார்கள்.

அநீதியாளர்களுடைய நடைமுறை எப்பொழுதும் இவ்வாறு தான் இருக்கிறது.

இதன் தொடர்ச்சி 8-ம் பக்கம்....

**National Watch Company**
**Sales & Service**



**B. Mohamed Adil**
93632 06679
99433 38000

196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM
99947 57172

**O.A.N. Doors & Steels**

V.A. SAIT
99430 30230



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad